Namma Kalvi

# Don

# தமிழ் துணைவன்

- அனைத்துப் பாடநூல் வினாக்கள்
- எண்ணற்ற கூடுதல் வினாக்கள்
- புதிய வினாத்தாள் அமைப்பின்படி ஒரு மதிப்பெண் வினாக்கள்
- தெளிவுரை, இலக்கண விளக்கங்கள்
- புணர்ச்சி விதிகள் அட்டவணை
- PTA வினாக்கள் குறிக்கப்பட்டுள்ளன

12

மார்ச் 2020 அரசு வினாத்தாள்

முழுமையாக திருத்தப்பட்ட 2020 - 21 பதிப்பு

இலவச இணைப்பு தமிழ் பயிற்சிப் புத்தகம்

நூலாக்கம்
Dr. சொ.அ. ராஜ்குமார் MBBS., MS(EM)

டான் பப்ளிகேஷன்ஸ் (பி) லிட்.

www.nammakalvi.in

Don

தமிழ்

12-ஆம் வகுப்பு

புதிய பாடத்திட்டத்தின்படி

முதற்பதிப்பு : 2019

திருத்திய பதிப்பு : 2020

© Don Publications (P) Ltd.

WARNING: All rights reserved. No part of this publication may be reproduced or stored in a retrieval system or transmitted in any form or by any means without the prior written permission of the Publisher, the copy-right holder.

## பதிப்புரை

அன்புமிகு மாணவச்செல்வங்களே! உங்கள் கைகளில் தவழும் இந்த 12 ஆம் வகுப்பிற்கான தமிழ்த் துணைவன், தமிழக அரசின் புதிய பாடத்திட்டத்தின்படி புதிய வினாத்தாளை மையமாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது.

இப்புத்தகத்தில் ஒவ்வொரு இயலாகச் செய்யுள் பகுதி, உரைநடைப் பகுதி, துணைப்பாடப் பகுதி மற்றும் இலக்கணப் பகுதி எனப் பிரிக்கப்பட்டு, அனைத்துப் பாடங்களிலும் உள்ள வினாக்களுக்கு உரிய விடைகள் கொடுக்கப்பட்டுள்ளன. மேலும், அரசின் புதிய வினாத்தாள் அடிப்படையில் கூடுதல் ஒரு மதிப்பெண் வினாக்கள் கொடுக்கப்பட்டுள்ளன. மேலும் அனைத்துப் பிரிவுகளிலும் தேவையான அளவு கூடுதல் வினாக்கள் உரிய விடைகளுடன் கொடுக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் மாணாக்கர்கள் தேர்வில் சிறந்த மதிப்பெண்கள் பெற முடியும்.

மாணவக் கண்மணிகள் தேர்வில் சிறந்த மதிப்பெண் பெற்று வெற்றி பெற எங்களது மனமார்ந்த வாழ்த்துக்கள்.

**சொ.அ. சுரேஷ் குமார்** MCA, MBA.,
**டான் பப்ளிகேஷன்ஸ் (பி) லிட்.**

நூலாசிரியர்கள்:

முனைவர். **மு.மோகன்ராஜ்,** எம்.ஏ., எம்.ஃபில்., பி.எட்., பிஎச்.டி.,
முதுகலைத் தமிழாசிரியர், திருச்சி.

திரு. **பூ.சதீஷ்குமார்,** எம்.ஏ., பி.எட்., எம்.ஃபில்.,
முதுகலைத் தமிழாசிரியர், நாமக்கல்.

பதிப்பகத்தார்:

**Don Publications (P) Ltd.**

**நிர்வாக அலுவலகம்:**
3/100/1, தூத்துக்குடி மெயின் ரோடு,
உத்தமபாண்டியன்குளம் (PO),
திருநெல்வேலி - 627 351.
செல் : **73730 88821.**
☎ **(0462) 2520977, 2520978.**
மின்னஞ்சல் : donbooks01@gmail.com

**சென்னை அலுவலகம்:**
புதிய எண் 17, பழைய எண் 21A 2 வது தளம்,
11வது அவென்யூ, அசோக்நகர்,
சென்னை - 600 083.
செல் : **77083 30666.**
☎ **(044) 48565226, 24892474.**
மின்னஞ்சல் : donbooks.chennai01@gmail.com

Visit us at : 94890 51855 | For Online purchase: www.donbookart.com | www.donbooks.co.in

# நூலும், ஆசிரியரும்

| செய்யுள் / கவிதைப்பேழை | | |
|---|---|---|
| 1. | இளந்தமிழே | சிற்பி பாலசுப்பிரமணியம் |
| 2. | தண்டியலங்காரம் | தண்டி |
| 3. | பிறகொரு நாள் கோடை | அய்யப்ப மாதவன் |
| 4. | நெடுநல்வாடை | நக்கீரர் |
| 5. | விருந்தினர் இல்லம் | ஜலாலுத்தீன் ரூமி |
| 6. | கம்பராமாயணம் | கம்பர் |
| 7. | திருக்குறள் | திருவள்ளுவர் |
| 8. | இதில் வெற்றி பெற | சுரதா |
| 9. | இடையீடு | சி.மணி |
| 10. | புறநானூறு | ஔவையார் |
| 11. | தெய்வமணிமாலை | இராமலிங்க அடிகள் |
| 12. | தேவாரம் | திருஞானசம்பந்தர் |
| 13. | அகநானூறு | அம்மூவனார் |
| 14. | கவிதைகள் | நகுலன் |
| 15. | சிலப்பதிகாரம் | இளங்கோவடிகள் |
| 16. | மெய்ப்பாட்டியல் | தொல்காப்பியர் |
| 17. | அதிசய மலர் | தமிழ்நதி |
| 18. | தேயிலைத் தோட்டப் பாட்டு | முகம்மது இராவுத்தர் |
| 19. | புறநானூறு | பிசிராந்தையார் |
| 20. | முகம் | சுகந்தி சுப்பிரமணியன் |
| 21. | இரட்சணிய யாத்திரிகம் | எச்.ஏ.கிருட்டிணனார் |
| 22. | சிறுபாணாற்றுப்படை | நத்தத்தனார் |

| உரைநடை | | |
|---|---|---|
| 1 | தமிழ்மொழியின் நடை அழகியல் | தி.சு.நடராஜன் |
| 2 | தமிழர் குடும்ப முறை | பக்தவத்சல பாரதி |
| 3 | பண்டைய காலத்துப் பள்ளிக்கூடங்கள் | உ.வே.சாமிநாதர் |
| 4 | இலக்கியத்தில் மேலாண்மை | வெ.இறையன்பு இ.ஆ.ப |

| விரிவானம் / துணைப்பாடம் | | |
|---|---|---|
| 1 | பாரதியின் கடிதம் | பாரதியார் |
| 2 | முதல்கல் | உத்தமசோழன் |
| 3 | உரிமைத்தாகம் | பூமணி |
| 4 | தலைக்குளம் | தோப்பில் முகமது மீரான் |
| 5 | நடிகர் திலகம் | பாலச்சந்திரன் சுள்ளிக்காடு |
| 6 | சங்கக்காலக் கல்வெட்டும் என் நினைவுகளும் | ஐராவதம் மகாதேவன் |
| 7 | கோடை மழை | சாந்தா தத் |

# பொருளடக்கம்....


**1. மொழி – உயிரினும் ஓம்பப்படும்**

| | | |
|---|---|---|
| செய்யுள் | இளந்தமிழே | 11 |
| உரைநடை | தமிழ் மொழியின் நடை அழகியல்.. | 21 |
| செய்யுள் | தண்டியலங்காரம் ☆ | 27 |
| துணைப்பாடம் | பாரதியின் கடிதம்.... | 34 |
| இலக்கணம் | தமிழாய் எழுதுவோம் | 38 |

**2. இயற்கை / வேளாண்மை / சுற்றுச்சூழல் – பெய்யெனப் பெய்யும் மழை**

| | | |
|---|---|---|
| உரைநடை | பெருமழைக்காலம் | 50 |
| செய்யுள் | பிறகொரு நாள் கோடை | 57 |
| | நெடுநல்வாடை ☆ | 64 |
| துணைப்பாடம் | முதல்கல் | 72 |
| இலக்கணம் | நால்வகைப் பொருத்தங்கள் | 76 |

**3. பண்பாடு – சுற்றத்தார் கண்ணே உள**

| | | |
|---|---|---|
| உரைநடை | தமிழர் குடும்ப முறை | 85 |
| செய்யுள் | விருந்தினர் இல்லம் | 92 |
| | கம்பராமாயணம் ☆ | 99 |
| துணைப்பாடம் | உரிமைத்தாகம் | 115 |
| இலக்கணம் | பொருள் மயக்கம் | 119 |
| வாழ்வியல் | திருக்குறள் ☆ | 130 |

**4. கல்வி – செல்வத்துள் எல்லாம் தலை**

| | | |
|---|---|---|
| உரைநடை | பண்டைய காலத்துப் பள்ளிக்கூடங்கள் | 141 |
| செய்யுள் | இதில் வெற்றி பெற ☆ | 148 |
| | இடையீடு | 162 |
| | புறநானூறு ☆ | 170 |
| துணைப்பாடம் | பாதுகாப்பாய் ஒரு பயணம் | 178 |
| இலக்கணம் | பா இயற்றப் பழகலாம் | 182 |

**5. நாகரிகம், தொழில், வணிகம் – நாடென்ப நாட்டின் தலை**

| | | |
|---|---|---|
| உரைநடை | மதராசப்பட்டினம் | 198 |
| செய்யுள் | தெய்வமணிமாலை | 205 |
| | தேவாரம் | 214 |
| | அகநானூறு | 220 |
| துணைப்பாடம் | தலைக்குளம் | 229 |
| இலக்கணம் | படிமம் | 233 |

**6. கலை, அழகியல், புதுமைகள் – சிறுகை அளாவிய கூழ்**

| | | |
|---|---|---|
| உரைநடை | திரைமொழி | 242 |
| செய்யுள் | கவிதைகள் | 248 |
| | சிலப்பதிகாரம் ✩ | 254 |
| | தொல்காப்பியம் – மெய்ப்பாட்டியல் | 272 |
| துணைப்பாடம் | நடிகர் திலகம் | 286 |
| இலக்கணம் | காப்பிய இலக்கணம் | 291 |
| வாழ்வியல் | திருக்குறள் ✩ | 303 |

**7. நாடு, சமூகம், அரசு, நிர்வாகம் – அருமை உடைய செயல்**

| | | |
|---|---|---|
| உரைநடை | இலக்கியத்தில் மேலாண்மை | 321 |
| செய்யுள் | அதிசயமலர் | 327 |
| | தேயிலைத் தோட்டப் பாட்டு | 334 |
| | புறநானூறு ✩ | 350 |
| துணைப்பாடம் | சங்ககாலக் கல்வெட்டும் என் நினைவுகளும் | 357 |
| இலக்கணம் | தொன்மம் | 360 |

**8. மனிதம், ஆளுமை – எல்லா உயிரும் தொழும்**

| | | |
|---|---|---|
| உரைநடை | நமது அடையாளங்களை மீட்டவர் | 374 |
| செய்யுள் | முகம் | 383 |
| | இரட்சணிய யாத்திரிகம் ✩ | 388 |
| | சிறுபாணாற்றுப்படை ✩ | 401 |
| துணைப்பாடம் | கோடை மழை | 415 |
| இலக்கணம் | குறியீடு | 419 |


## இணைப்புப் பகுதி


1. பத்தியும் வினாக்களும் ........ 427
2. இலக்கிய நயம் பாராட்டல் ........ 431
3. பழமொழியும் வாழ்க்கை நிகழ்வும் ........ 443
4. கவிதை ........ 456
5. ஆங்கிலப் பழமொழிகளும் தமிழில் பொருளும் ........ 460
6. வாழ்வியலில் திருக்குறள் பயன்பாடு ........ 465
7. ஆங்கிலச் சொற்கள் - தமிழாக்கம் ........ 480
8. கலைச்சொற்கள் ........ 484

மார்ச் 2020 அரசு வினாத்தாள் ........ 485


* * * * *

www.nammakalvi.in

Don

# புதிய வினாத்தாள் வடிவமைப்பு மற்றும் நேரப்பங்கீட்டு முறை

நேரம் : 15 நிமிடங்கள் + 3.00 மணி — மொத்த மதிப்பெண்கள் : 90

## தமிழ்

| பகுதி | வினா. எண் | வினா வகை | கேட்கப்படும் வினாக்கள் | எழுத வேண்டிய வினாக்கள் | வழங்கப்படும் மதிப்பெண்கள் | எழுதும் நேரம் (நிமி) | திருப்புதல் நேரம் (நிமி) |
|---|---|---|---|---|---|---|---|
| I. | 1 - 14 | பலவுள் தெரிக.<br>(செய்யுள், உரைநடை)<br>(இலக்கணம். துணைப்பாடம்) | 14 | 14 | 14 × 1 = 14 | 20 | 5 |
| II. | 15 - 18<br>19 - 21<br>22 - 30 | (அ) குறுவினா (செய்யுள்)<br>(ஆ) குறுவினா (உரைநடை)<br>குறுவினா (இலக்கணம்) | 4<br>3<br>9 | 3<br>2<br>7 | 3 × 2 = 6<br>2 × 2 = 4<br>7 × 2 = 14 | 12<br>8<br>28 | 2<br>2<br>6 |
| III. | 31 - 34<br>35 - 38<br>39 - 43 | (அ) சிறுவினா (செய்யுள்)<br>(ஆ) சிறுவினா (உரைநடை)<br>மொழித்திறன் பயிற்சி | 3<br>3<br>4 | 2<br>2<br>3 | 2 × 4 = 8<br>2 × 4 = 8<br>3 × 4 = 12 | 12<br>12<br>18 | 2<br>2<br>3 |
| IV. | 44 - 46 | (அ) நெடுவினா (செய்யுள், உரைநடை)<br>(ஆ) நெடுவினா (துணைப்பாடம்) | 4<br>2 | 2<br>1 | 2 × 6 = 12<br>1 × 6 = 6 | 20<br>10 | 3<br>2 |
| V. | 47 | மனப்பாடப் பகுதி | 2 | 2 | 4 + 2 = 6 | 10 | 3 |
| | | மொத்தம் | 48 | 38 | 90 | 150 | 30 |

### குறிப்பு

- தமிழ் தேர்வுத்தாள் மொத்தம் 90 மதிப்பெண்களுக்கு ஒரே தாளாக வரும்.
- தேர்வு எழுதுவதற்கான நேரம் 3.00 மணி (180 நிமிடங்கள்) + 15 நிமிடங்கள்.
- தெரிவு வினாக்களுக்கான விடைகள் முழுவதும் எழுத வேண்டும். சுருக்கமாக (அ) or (ஆ) / (1) அல்லது (2) என்று மட்டும் எழுதுதல் கூடாது. விடைகள் எழுதும் போது (அ) அல்லது (ஆ) என்று எழுதி அதற்கான முழு விடையையும் எழுத வேண்டும்.
- எல்லா விடைகளும் நீலம் அல்லது கருப்பு மை ஏதாவது ஒன்றினால் மட்டுமே எழுத வேண்டும். இரண்டு வண்ணங்களும் சேர்த்து விடைத்தாளில் பயன்படுத்தக் கூடாது. (மேற்கோள் காட்டுதல். அடிக்கோடிடுதல். தலைப்புகளுக்குக் கூட இரண்டாவது வண்ணத்தைப் பயன்படுத்தக் கூடாது)
- விடைகள் தெளிவாகவும் எழுத்துக்கள் புரியும் படியும் எழுத வேண்டும்.
- வினாத்தாளை கசக்காமல். அழுக்காகாமல் பார்த்துக் கொள்ளவும்.

# மனப்பாடப் பாடல்கள்

## தண்டியலங்காரம்

ஓங்கலிடை வந்து உயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத்(து) இருளகற்றும் – ஆங்கவற்றுள்
மின்னோர் தனியாழி வெங்கதிரொன்(று) ஏனையது
தன்னோர் இலாத தமிழ்!

– தண்டி

## நெடுநல்வாடை

PTA

வையகம் பனிப்ப வலனேர்பு வளைஇப்
பொய்யா வானம் புதுப்பெயல் பொழிந்தென
ஆர்கலி முனைஇய கொடுங்கோல் கோவலர்
ஏறுடை இனநிரை வேறுபுலம் பரப்பிப்
புலம்பெயர் புலம்பொடு கலங்கி கோடல்
நீடுஇதழ்க் கண்ணி நீர் அலைக் கலாவ
மெய்க்கொள் பெரும்பனி நலிய பலருடன்
கைக்கொள் கொள்ளியர் கவுள்புடையூஉ நடுங்க

– நக்கீரர்

## கம்பராமாயணம்

PTA, M-20

'துன்பு உளதுஎனின் அன்றோ
சுகம் உளது? அது அன்றிப்
பின்பு உளது; இடை மன்னும்
பிரிவு உளது என உன்னேல்;
முன்பு உளெம் ஒரு நால்வேம்
முடிவு உளது என உன்னா
அன்பு உள, இனி, நாம் ஓர்
ஐவர்கள் உளர் ஆனோம்'

குகனோடும் ஐவர் ஆனேம்
முன்பு; பின் குன்று சூழ்வான்
மக னொடும் அறுவர் ஆனேம்;
எம்முழை அன்பின் வந்த
அகன் அமர் காதல் ஐய!
நின்னொடும் எழுவர் ஆனேம்;
புகல் அருங் கானம் தந்து,
புதல்வரால் பொலிந்தான் நுந்தை.

– கம்பர்

## திருக்குறள்

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்.

செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்ற லரிது.

நன்றி மறப்பது நன்றன்று; நன்றல்லது PTA
அன்றே மறப்பது நன்று.

எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்; உய்வில்லை PTA
செய்ந்நன்றி கொன்ற மகற்கு.

அஃகாமை செல்வத்திற்கு யாதெனின் வெஃகாமை
வேண்டும் பிறன்கைப் பொருள்.

மறத்தல் வெகுளியை யார்மாட்டும்; தீய
பிறத்தல் அதனான் வரும்.

தன்னைத்தான் காக்கின் சினம்காக்க; காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம்.

சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும்
ஏமப் புணையைச் சுடும்.

நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றும்தன் PTA
உண்மை அறிவே மிகும்.

– திருவள்ளுவர்

## இதில் வெற்றி பெற

விண்வேறு; விண்வெளியில் இயங்கு கின்ற
வெண்மதியும் செங்கதிரும் முகிலும் வேறு;
மண்வேறு; மண்ணோடு கலந்தி ருக்கும்
மணல்வேறு; பனித்துளியும் மழையும் வேறு;
புண்வேறு; வீரர்களின் விழுப்புண் வேறு;
புகழ்வேறு; செல்வாக்கு வேறு; காணும்
கண்வேறு; கல்விக்கண் வேறு; கற்றார்
கவிநடையும் உரைநடையும் வேறு வேறு

– சுரதா

## புறநானூறு

அறிவும் புகழும் உடையோர் மாய்ந்தென,
வறுந்தலை உலகமும் அன்றே; அதனால்
காவினெம் கலனே; சுருக்கினெம் கலப்பை;
மரங்கொல் தச்சன் கைவல் சிறாஅர்
மழுவுடைக் காட்டகத்து அற்றே
எத்திசைச் செலினும், அத்திசைச் சோறே. (206)

– ஔவையார்

## தெய்வமணிமாலை

ஒருமையுடன் நினதுதிரு மலரடி நினைக்கின்ற PTA
உத்தமர்தம் உறவுவேண்டும்
உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார்
உறவுகல வாமைவேண்டும்
பெருமைபெறும் நினதுபுகழ் பேசவேண்டும் பொய்மை
பேசா திருக்க வேண்டும்
பெருநெறி பிடித்தொழுக வேண்டும் மதமானபேய்
பிடியா திருக்கவேண்டும்

– இராமலிங்க அடிகள்

## சிலப்பதிகாரம்

குழல்வழி நின்றது யாழே, யாழ்வழித் PTA
தண்ணுமை நின்றது தகவே, தண்ணுமைப்
பின்வழி நின்றது முழவே, முழவொடு
கூடி நின்று இசைத்தது ஆமந்திரிகை

– இளங்கோவடிகள்

## திருக்குறள்

அறிவற்றம் காக்கும் கருவி செறுவார்க்கும்
உள்அழிக்கல் ஆகா அரண்.
எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு. PTA
எதிரதாக் காக்கும் அறிவினார்க்கு இல்லை
அதிர வருவதோர் நோய்.
நல்லினத்தின் ஊங்கும் துணையில்லை; தீயினத்தின்
அல்லல் படுப்பதூஉம் இல்.
வினைத்திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம்
மற்றைய எல்லாம் பிற.
சொல்லுதல் யார்க்கும் எளிய; அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல். M-20
உருவுகண்டு எள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்கு
அச்சாணி அன்னார் உடைத்து.
கடன்அறிந்து காலம் கருதி இடன்அறிந்து
எண்ணி உரைப்பான் தலை.
வாள்போல் பகைவரை அஞ்சற்க; அஞ்சுக
கேள்போல் பகைவர் தொடர்பு.
பழகிய செல்வமும் பண்பும் கெடுக்கும்
கழகத்துக் காலை புகின்.

– திருவள்ளுவர்

## புறநானூறு

காய்நெல் அறுத்துக் கவளம் கொளினே;
மாநிறைவு இல்லதும், பல்நாட்கு ஆகும்;
நூறுசெறு ஆயினும், தமித்துப்புக்கு உணினே,
வாய்புகுவதனினும் கால்பெரிது கெடுக்கும்;

- பிசிராந்தையார்

## இரட்சணிய யாத்திரிகம்

பாதகர் குழுமிச் சொற்ற பழிப்புரை என்னும் கொள்ளி [PTA]
ஏதமில் கருணைப் பெம்மான் இருதயத்து ஊன்ற ஊன்ற
வேதனை உழந்து சிந்தை வெந்து புண்பட்டார் அல்லால்
நோதகச் சினந்தோர் மாற்ற நுவன்றிலர் கரும நோக்கி.

- எச்.ஏ.கிருட்டிணனார்

## சிறுபாணாற்றுப்படை

எழுசமங் கடந்த எழு உறழ் திணிதோள்
எழுவர் பூண்ட ஈகைச் செந்நுகம்
விரிகடல் வேலி வியலகம் விளங்க
ஒருதான் தாங்கிய உரனுடை நோன்தாள்

- நத்தத்தனார்

மொழி – உயிரினும் ஓம்பப் படும்

இயல் 1

# இளந்தமிழே !

## செய்யுள்

– சிற்பி பாலசுப்பிரமணியம்

**நூற்குறிப்பு :**



* இக்கவிதை சிற்பி பாலசுப்பிரமணியன் இயற்றிய 'நிலவுப்பூ' என்னும் கவிதைத் தொகுப்பில் இடம் பெற்றுள்ளது.
* இக்கவிதைத் தொகுப்பு 1963–ல் வெளிவந்தது.
* 'நிலவுப்பூ' என்பது சிற்பியின் முதல் கவிதைத் தொகுப்பு என்பது குறிப்பிடத்தக்கது.

**ஆசிரியர் குறிப்பு :**

PTA

ஆசிரியர் : பாலசுப்பிரமணியம்

பெற்றோர் : சி. பொன்னுசாமி – கண்டியம்மாள்

ஊர் : ஆத்துப் பொள்ளாச்சி, கோவை மாவட்டம்.

பணி : + கவிஞர், + பேராசிரியர், + எழுத்தாளர், + இதழாளர், + மொழி பெயர்ப்பாளர், + சாகித்திய அகாதெமியின் செயற்குழு உறுப்பினர், + திட்டப் பொறுப்பாளர். மேலும் கோவை பாரதியார் பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறைத் தலைவராகப் பணியாற்றியவர்.

பிறப்பு : சூலை 29, 1936

விருது : 'ஒரு கிராமத்து நதி' என்னும் கவிதை நூலிற்காகவும், மொழி பெயர்ப்புக்காகவும் இருமுறை சாகித்திய அகாதெமி விருது பெற்றவர்.

சிறப்பு : இவருடைய கவிதைகள் ஆங்கிலம், கன்னடம், மலையாளம், மராத்தி, இந்தி ஆகியவற்றில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

நூல்கள் : ◦ ஒளிப்பறவை, ◦ சர்ப்பயாகம், ◦ சூரிய நிழல், ◦ ஒரு கிராமத்து நதி, ◦ பூஜ்யங்களின் சங்கிலி போன்ற கவிதை நூல்களை இயற்றினார். ◦ இலக்கியச் சிந்தனைகள், ◦ மலையாளக் கவிதை, ◦ அலையும் சுவடும் உள்ளிட்ட உரைநடை நூல்களையும் எழுதியுள்ளார். மலையாளத்திலிருந்து கவிதைகளையும், புதினங்களையும் மொழி பெயர்த்துள்ளார்.

1996– இல் தொடங்கப்பட்ட 'சிற்பி அறக்கட்டளை', தமிழில் கவிஞர்களுக்கு ஆண்டுதோறும் விருதுகள், பரிசுகள் அளித்து வருகிறது.

**படைப்புகள் – தெரிந்துகொள்வோம்**

| | |
|---|---|
| கவிதை நூல்கள் | : 20 |
| கவிதை நாடகம் | : 1 |
| சிறுவர் நாடகம் | : 2 |
| உரைநடை நூல்கள் | : 12 |
| வாழ்க்கை வரலாற்று நூல்கள் | : 8 |
| இலக்கிய வரலாறு | : 1 |
| ஆங்கில நூல் | : 1 (A Comparative study of Bharati and Vallathol) |
| உரைநூல்கள் | : 3 |
| தொகுப்பு நூல் | : 1 |
| பதிப்பித்த நூல்கள் | : 11 |

செம்பரிதி மலைமேட்டில் தலையைச் சாய்ப்பான்
செந்நிறத்துப் பூக்காடாம் வான மெல்லாம்!
தம்கைகள் அதனைப்போல் சிவந்து நோகத்
தாமுழைக்கும் தொழிலாளர் வியர்வை வெள்ளம்
விம்முகின்ற தோள்மீதில் முத்துமுத்தாய்
வீற்றிருக்கும், அவையெல்லாம் வியந்து பாட
எம்மருமைச் செந்தமிழே! உன்னை யல்லால்
ஏற்றதுணை வேறுண்டோ? இயம்பி டாயே!

மூண்டுவரும் கவிதைவெறிக் குணவாய் எங்கள்
முத்தமிழே! நீயுள்ளாய்; முன்னம் ஓர்நாள்
பாண்டியரின் சங்கத்தில் கொலுவி ருந்தாய்!
பாரிமுதல் வள்ளல்களை ஈன்று தந்தாய்!
மீண்டுமந்தப் பழமைநலம் புதுக்கு தற்கு
மெய்சிலிர்க்கத் தமிழ்க்குயிலே! கூவி வா, வா!
கூண்டதனை உடைத்தெழுந்த சிங்கம் போலக்
குளிர்பொதிகைத் தென்தமிழே! சீறி வா, வா!

## சொல்லும் பொருளும்:

| | |
|---|---|
| செம்பரிதி மலைமேட்டில் | : கதிரவன் மலை மீது |
| தலையைச் சாய்ப்பான் | : மறைவான். அப்போது |
| செந்நிறத்தும் பூக்காடாம் | : சிவந்த பூக்காடு போல |
| வான மெல்லாம் | : வானம் எங்கும் காட்சியளிக்கும் |
| தம்கைகள் அதனைப்போல் | : அதைப் போல் தமது கைகள் |
| சிவந்து நோகத் | : சிவந்து நோகும்படியாக |
| தாமுழைக்கும் தொழிலாளர் விம்முகின்ற தோள்மீதில் | : உழைக்கும் தொழிலாளர்களின் |
| முத்துமுத்தாய் | : பருத்திருக்கும் தோள்களில் முத்து முத்தாய் |
| வீற்றிருக்கும் வியர்வை வெள்ளம் | : தோன்றியிருக்கும் (வியர்வைத் துளிகள்) |
| அவையெல்லாம் வியந்து பாட | : அவற்றை எல்லாம் வியப்புற்றுப் பாடுவதற்கு |
| எம்மருமைச் செந்தமிழே! | : எனது அருமைச் செந்தமிழே! |
| உன்னையல்லால் ஏற்ற துணை வேறுண்டோ? | : உன்னைத் தவிர அதற்கேற்ற துணை வேறு உண்டோ? |
| இயம்பிடாயே! | : கூறுவாயே! |
| மூண்டுவரும் கவிதை வெறிக் குணவாய் | : பொங்கிவரும் கவிதைப் பற்றுக்கு உணவாய் |
| எங்கள் முத்தமிழே! நீயுள்ளாய்; | : எங்கள் முத்தமிழே! நீ ஆதாரமாக இருக்கிறாய் |
| முன்னம் ஓர் நாள் | : முன்பு ஒரு நாள் |
| பாண்டியரின் சங்கத்தில் | : சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த பாண்டியனின் அவையில் |
| கொலுவிருந்து | : வழிபடு பொருளாக இருந்தாய் |
| பாரி முதல் வள்ளல்களை | : பாரி முதலான வள்ளல் பெருமக்களைப் |
| ஈன்று தந்தாய்! | : பெற்றுத்தந்தாய்! |
| மீண்டும் அந்த பழமை நலம் புதுக்கு தற்கு | : அந்த சங்கத் தமிழின் பழமையான நலத்தைப் புகுத்துவதற்கு மீட்டுக் கொணர |

| | | |
|---|---|---|
| மெய் சிலிர்க்கத் தமிழ்க்குயிலே! | : | உடல் சிலிர்க்குமாறு தமிழ் ஆகிய குயிலே! |
| கூவி வா! | : | நீ பாடி வருக! |
| கூண்டதனை உடைத்தெழுந்த | : | தான் அடைக்கப்பட்ட கூண்டை உடைத்து வெளிவரும் |
| சிங்கம் போல | : | வலிமை மிகுந்த சிங்கத்தைப் போல |
| குளிர் பொதிகைத் தென்தமிழே! | : | குளிர்ச்சிப் பொருந்திய அகத்திய தமிழ் மாமுனி வாழ்ந்த பொதிகை மலையில் பிறந்த தென்னாட்டுத் தமிழே! |
| சீறி வா! வா! | : | சீற்றத்தோடு நீ வருக! |

**தெளிவுரை :**

சிவந்த நிறக் கதிர்களை உடைய கதிரவன், மாலை நேரத்தில் மலைக்குப் பின்னால் சென்று மறைவான். அப்பொழுது கதிரவன் ஒளிப்பட்டு வானமெல்லாம் சிவந்த பூக்கள் பூத்திருக்கும் பூக்காடு போலக் காட்சியளிக்கும். அதைப்போல் உடல் நோக உழைக்கும் உழைப்பாளியின் கைகள் சிவந்திருக்கும். அவரின் பருத்த தோள் மீது முத்து முத்தாய் வியர்வை, வெள்ளம் போல் வழிந்தோடும். அத்தகைய உலகை உயர்த்தும் உழைப்பாளர்களின் வியர்வையை வியந்து பாடுவதற்குத் தமிழே உன்னால் தான் முடியும். உன்னைத் தவிர எனக்கு வேறு துணை உண்டோ? கூறுவாய் என் செந்தமிழே!

பொங்கி வரும் கவிதை ஆற்றலுக்கு உணவாக முத்தமிழே (இயல், இசை, நாடகம்) நீ இருக்கிறாய்! மதுரையை ஆட்சி புரிந்த பாண்டிய மன்னனின் அவையில் வீற்றிருந்தாய்!. புலவர்கள், மன்னர்கள் வழிபடு பொருளாகச் சிறந்திருந்தாய். பாரிவள்ளல் போன்று பல வள்ளல்களைப் பெற்றுத் தந்தாய்! அத்தகைய பழமையான நலத்தை மீண்டும் இங்கே புகுத்துவதற்குத் தமிழ்க்குயிலே மீண்டும் கூவி வா! தன் கூட்டை உடைத்து வெளிக் கிளம்பும் சிங்கத்தைப் போல, அகத்திய மாமுனிவர் வாழ்ந்த குளிர்ச்சிப் பொருந்திய பொதிகை மலையில் பிறந்த தென்னாட்டுத் தமிழே, சீற்றத்தோடு வா!

**அருஞ்சொற்பொருள் :**

| | | |
|---|---|---|
| 1. பரிதி | : | சூரியன், கதிரவன் |
| 2. விம்முதல் | : | பருத்தல், மிகுதல் |
| 3. வீற்றிருத்தல் | : | அமர்ந்திருத்தல் |
| 4. முன்னம் | : | முன்பு |
| 5. கொலு | : | பொம்மை (உருவ பொம்மை வைத்து வழிபாடு செய்தல்) |
| 6. பொதிகை | : | மலை |
| 7. இயம்புதல் | : | சொல்லுதல் |
| 8. புதுக்குதற்கு | : | புகுவதற்கு |
| 9. மூண்டுவரும் | : | பொங்கி வரும் |
| 10. முத்தமிழ் | : | இயல், இசை, நாடகத் தமிழ் |
| 11. தென்தமிழ் | : | தென்னாட்டில் பிறந்த தமிழ் |

## I. பலவுள் தெரிக:

1 மதிப்பெண் வினாக்கள்

**பாடநூல் வினா:**

1. "மீண்டுமந்த பழமை நலம் புதுக்குதற்கு" கவிஞர் குறிப்பிடும் பழமை நலம்
   க) பாண்டியரின் சங்கத்தில் கொலுவிருந்தது  உ) பொதிகையில் தோன்றியது
   ங) வள்ளல்களைத் தந்தது

   அ) க மட்டும் சரி  ஆ) க, உ இரண்டும் சரி
   இ) ங மட்டும் சரி  ஈ) க, ங இரண்டும் சரி

   **விடை:** ஈ) க, ங இரண்டும் சரி

## கூடுதல் வினாக்கள்:

2. நம் பண்பாட்டின் நீட்சி, அடையாளமாக விளங்குவது –

அ) தமிழ் மொழி　　ஆ) தெலுங்கு மொழி
இ) ஆங்கில மொழி　　ஈ) கன்னட மொழி

விடை: அ) தமிழ் மொழி

3. 'இளந்தமிழே' என்ற சிற்பியின் மரபுக் கவிதை எந்த நூலில் இருந்து எடுத்தாளப் பெற்றுள்ளது? [M-20]

அ) ஒளிப்பறவை　　ஆ) நிலவுப்பூ
இ) சர்ப்பயாகம்　　ஈ) சூரிய நிழல்

விடை: ஆ) நிலவுப்பூ

4. சிற்பி பாலசுப்பிரமணியம் தமிழ்த் துறைத்தலைவராக விளங்கிய பல்கலைக்கழகம்

அ) சென்னை　　ஆ) பாரதிதாசன்　　இ) காமராசர்　　ஈ) பாரதியார்

விடை: ஈ) பாரதியார்

5. கீழ்க்கண்டவற்றுள் சிற்பியின் சாகித்திய அகாதெமி விருது பெற்ற நூல் எது ? [PTA]

அ) ஒரு கிராமத்து நதி　　ஆ) பூஜ்யங்களின் சங்கிலி
இ) சூரிய நிழல்　　ஈ) ஒளிப்பறவை

விடை: அ) ஒரு கிராமத்து நதி

6. 'பரிதி' என்ற சொல்லின் பொருள் ........................

அ) நிலவு　　ஆ) கதிரவன்　　இ) மலை　　ஈ) பூமி

விடை: ஆ) கதிரவன்

7. கூண்டதனை உடைத்தெழுந்த சிங்கம் போலக் குளிர் பொதிகைத் தென்தமிழே! சீறி வா! வா! – இவ்வடி இடம் பெற்றுள்ள நூல் எது ?

அ) ஒரு கிராமத்து நதி　　ஆ) சர்ப்பயாகம்
இ) நிலவுப்பூ　　ஈ) சூரிய நிழல்

விடை: இ) நிலவுப்பூ

8. 'செம்பரிதி' – இலக்கணக் குறிப்பு தருக.

அ) பண்புத்தொகை　　ஆ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
இ) வினைத்தொகை　　ஈ) அடுக்குத் தொடர்

விடை: அ) பண்புத்தொகை

9. 'விம்முகின்ற தோள்மீதில் முத்துமுத்தாய்' – இவ்வடியில் அடிக்கோடிட்ட சொற்றொடருக்கான இலக்கணக் குறிப்பு தருக.

அ) எண்ணும்மை　　ஆ) இரட்டைக்கிளவி
இ) வினைத்தொகை　　ஈ) அடுக்குத்தொடர்

விடை: ஈ) அடுக்குத்தொடர்

10. பொருத்துக.

| | சொல் | – | | பொருள் |
|---|---|---|---|---|
| அ) | பரிதி | – | (i) | பொம்மை |
| ஆ) | இயம்பு | – | (ii) | கதிரவன் |
| இ) | முன்னம் | – | (iii) | சொல் |
| ஈ) | கொலு | – | (iv) | முன்பு |

| | | | | |
|---|---|---|---|---|
| அ) | (iv) | (iii) | (ii) | (i) |
| ஆ) | (ii) | (iii) | (iv) | (i) |
| இ) | (iii) | (ii) | (v) | (i) |
| ஈ) | (iii) | (ii) | (v) | (i) |

விடை: ஆ) (ii) (iii) (iv) (i)

11. 'வியந்து' இச்சொல்லைப் பிரிக்கும் முறை ....................

அ) வியந் + த் + உ  ஆ) வியந்து + து
இ) வி + யந் + த் + உ  ஈ) விய + த்(ந்) + த் + உ

விடை: ஈ) விய + த்(ந்) + த் + உ

12. 'செம்பரிதி மலைமேட்டில் தலையைச் சாய்ப்பான்
செந்நிறத்துப் பூக்காடாம் வான மெல்லாம்!'
– இவ்வடியில் இடம் பெறும் தொடை நயம் ....................

அ) மோனை  ஆ) இயைபு  இ) எதுகை  ஈ) முரன்

விடை: அ) மோனை

## II. குறுவினாக்கள் :

2 மதிப்பெண் வினாக்கள்

பாடநூல் வினா:

1. கவிஞர் சிற்பி எவற்றை வியந்து பாட, தமிழின் துணை வேண்டும் என்கிறார்? M-20

உடல் நோக உழைக்கும் தொழிலாளர்கள் சிந்தும் வியர்வை மற்றும் மாலை நேரத்தில் வானில் தோன்றும் சிவந்த பூக்களைப் போல அவர்களின் கைகள் ஆகியவற்றை வியந்து பாட தமிழின் துணைவேண்டும் என்கிறார் சிற்பி.

கூடுதல் வினாக்கள்:

2. தமிழ்க்குயிலே! கூவி வா! வா! எனச் சிற்பி ஏன் அழைக்கிறார்?

மதுரையை ஆண்ட பாண்டிய மன்னனின் அவையில் வழிபடு பொருளாய் வீற்றிருந்தாய்! பாரி போன்ற வள்ளல்களைப் பெற்றுத் தந்தாய்! இத்தகைய பழமை நலத்தை மீண்டும் புகுத்த தமிழ்க்குயிலே! வா வா! என அழைக்கிறார்.

3. செந்தமிழே எதைப்போல சீறி வா எனக் கவிஞர் அழைக்கிறார்?

தன்னைச் சிறைப்படுத்திய கூண்டை உடைத்து வெளிக்கிளம்பும் சிங்கத்தைப் போல, குளிர்ச்சிப் பொருந்திய பொதிகை மலையில் பிறந்த செந்தமிழே சீறி வா! எனக் கவிஞர் அழைக்கிறார்.

4. நிலவுப்பூ – நூற் குறிப்புத் தருக.

நிலவுப்பூ என்பது ஒரு மரபுக்கவிதை நூலாகும். இதனை இயற்றியவர் சிற்பி பாலசுப்பிரமணியன் ஆவார்.'இளந்தமிழே' என்னும் தலைப்பில் அமைந்த கவிதை, இந்நூலில் இடம் பெற்றுள்ளது.

5. தமிழ் எத்தகைய வலிமை வாய்ந்தது? PTA

* தமிழ்மொழி நம் அடையாளம்; பண்பாட்டின் நீட்சி; தோன்றிய காலந்தொட்டு மக்களால் பேசப்பட்டு, எழுதப்பட்டு உயிர்ப்போடும் இளமையோடும் இருப்பது.
* இன்றும் தமிழ்மொழியின் புகழ் எத்திசையும் இலங்குகிறது.
* தமிழ் பல புதிய உள்ளடக்கங்களால் தன்னைப் புதுப்பித்துக்கொண்டு பழஞ்சிறப்பைத் தக்க வைத்துக்கொள்ளும்.

6. "முன்னம் ஓர்நாள் பாண்டியரின் சங்கத்தில் கொலுவிருந்தாய்" – யார், யாரைப் பற்றி கூறியது? PTA

இளந்தமிழே என்னும் செய்யுளில் சிற்பி பாலசுப்பிரமணியம் முத்தமிழை பற்றி கூறியது.

## III. சிறுவினாக்கள் :

4 மதிப்பெண் வினாக்கள்

பாடநூல் வினாக்கள்::

1. 'செம்பரிதி மலைமேட்டில் தலையைச் சாய்ப்பான் செந்நிறத்துப் பூக்காடாம் வான மெல்லாம்' – இத்தொடர் வெளிப்படுத்தும் காட்சி நயத்தை விளக்குக :

சிவந்த நிறக் கதிர்களை உடையது கதிரவன். இக்கதிரவன் மாலை நேரத்தில் மறையும். அவ்வாறு மறையும் போது மலைக்குப் பின்னால் தன் தலையைச் சாய்ந்து உறங்குவது போல இருக்கும்.

அவ்வாறு கதிரவன் மறையும் மாலை நேரத்தில் வானமெங்கும் செம்மை நிறத்தில் ஒளி வீசும். அது பூக்கள் நிறைந்த பூக்காடு போல் வானமெங்கும் தெரிகிறது என்று சிற்பியின் இவ்வரி சிறந்த காட்சி நயத்தைத் தருகிறது.

2. பின்வரும் இரு பாக்களின் கருத்துகளிலுள்ள வேற்றுமையை எடுத்துக்காட்டுக,

| | |
|---|---|
| பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினானே. – நன்னூல் | மீண்டுமந்தப் பழமைநலம் புதுக்கு தற்கு மெய்சிலிர்க்கத் தமிழ்க்குயிலே! கூவி வா, வா! – சிற்பி பாலசுப்பிரமணியம் |

வேற்றுமை:

| நன்னூல் | சிற்பி பாலசுப்பிரமணியம் |
|---|---|
| * பழையன நீங்குதலும் புதியன புகுதலும் குற்றமில்லை அது காலத்தைப் பொருத்து மாறுபட்டுக் கொண்டே இருக்கும் என்பது நன்னூலாரின் கருத்தாகும். | * பாண்டியன் அவையில் கொலுவிருந்தது, பாரி போன்ற வள்ளல்களைப் பெற்றெடுத்தது போன்ற பழமையான நலம் மீண்டும் புகுதல் வேண்டும் என்கிறார் சிற்பி. |
| கரு: பழையது நீங்கும் புதியது புகும் | கரு: 'பழமை நலம்' புக வேண்டும் |

**கூடுதல் வினா:**

3. கூண்டதனை உடைத்தெழுந்த சிங்கம் போலக்
குளிர்பொதிகைத் தென்தமிழே சீறி வா, வா! – இடஞ்சுட்டிப் பொருள் விளக்கம் தருக.

**இடம்:**

இவ்வடிகள் சிற்பி பாலசுப்பிரமணியன் இயற்றிய 'நிலவுப்பூ' என்னும் கவிதைத் தொகுப்பில், இளந்தமிழே என்ற தலைப்பில் அமைந்துள்ளது.

**பொருள்:**

தான் அடைக்கப்பட்ட கூண்டை உடைத்து வெளிவரும் வலிமை மிகுந்த சிங்கத்தைப் போல குளிர்ச்சிப் பொருந்திய பொதிகை மலையில் பிறந்த தென்னாட்டுத் தமிழே! சீற்றத்தோடு வா!

**விளக்கம்:**

சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த பாண்டியனின் அவையில் வழிபடு பொருளாக இருந்த தமிழே! பாரி முதலான வள்ளல் பெருமக்களைப் பெற்றுத் தந்தாய்! அந்த சங்கத் தமிழின் பழமையான நலத்தை புகுத்துவதற்கு உடல் சிலிர்க்குமாறு தமிழ் ஆகிய குயிலே! நீ பாடி வருக! தான் அடைக்கப்பட்ட கூண்டை உடைத்து வெளிவரும் சிங்கத்தைப் போல, குளிர்ச்சி பொருந்திய அகத்திய தமிழ் மாமுனி வாழ்ந்த பொதிகை மலையில் பிறந்த தென்னாட்டுத் தமிழே! சீற்றத்தோடு நீ வருக!

## IV. நெடுவினா:

6 மதிப்பெண் வினாக்கள்

**பாடநூல் வினா:**

1. தமிழின் சீரிளமைத் திறம் வியந்து கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக.

**முன்னுரை:**

தமிழ்மொழி நம் அடையாளம்; பண்பாட்டின் நீளம்; தோன்றிய காலந்தொட்டு மக்களால் பேசப்பட்டு, எழுதப்பட்டு உயிர்ப்போடும் இளமையோடும் இருப்பது. அத்தகைய தமிழின் பெருமையைப் பேசாத மரபுக்கவிஞர்கள் இலர் எனலாம். இத்தகைய சிறந்த தமிழின் திறம் வியந்து கவிஞர் சிற்பி பாடுவனவற்றைக் காண்போம்.

**வேறு துணை உண்டோ?**

சிவந்த நிறத்தை உடைய கதிரவன் மலையின் பின்னே மாலை நேரத்தில் மறைவான். அப்போது வானம் சிவந்த பூக்காடு போலக் காட்சியளிக்கும். அச்சிவப்பைப் போல, தமது கைகள் சிவக்க உழைக்கும் தொழிலாளரின் வியர்வை, அவரின் பருத்த தோள்மீது முத்துமுத்தாய் காட்சியளிக்கும். இவற்றை வியந்து பாட எனதருமை தமிழே உன்னையன்றி ஏற்ற துணை வேறுண்டோ! கூறுவாயா என வியக்கிறார்.

**பொதிகைத் தென்தமிழ்:**

பொங்கி வரும் கவிதை எண்ணத்திற்கு உணவாய் இருக்கிறாய்

அறம் வளர்த்த பாண்டியனின் அவையிலே வீற்றிருந்தாய்!

பாரி முதலான வள்ளல்களைப் பெற்றுத் தந்தாய்!

அன்று நீ செய்த அந்தப் பழமையான நலத்தை மீண்டும் கொண்டுவர, கூட்டை உடைத்து வெளியேறும் சிங்கம் போலக் குளிர்ந்த பொதிகையில் தோன்றிய தமிழே!

இவ்வாறு பல காலங்கடந்தும் பழமையான சிறப்புகளைத் தம்மகத்தே கொண்டு விளங்குவது தமிழாகும்.

**முடிவுரை:**

காலத்திற்கு ஏற்றவாறு தம்மைப் புதுப்பித்துக்கொண்டும் இன்றளவும் சிறப்புற்றுத் திகழ்கின்ற தமிழின் திறத்தைக் கவிஞர் சிற்பி வியந்து பாடுகிறார்.

## V. இலக்கணக்குறிப்பு :

| | | |
|---|---|---|
| செம்பரிதி, செந்தமிழ், செந்நிறம், முத்தமிழ் | – | பண்புத்தொகைகள் |
| முத்து முத்தாய், வா வா | – | அடுக்குத்தொடர்கள் |
| சிவந்து, ஈன்று வியந்து | – | வினையெச்சங்கள் |
| வியர்வை வெள்ளம், தமிழ்க்குயில் | – | உருவகங்கள் |
| சாய்ப்பான் | – | வினையாலணையும் பெயர் |
| தந்தாய் | – | முன்னிலை ஒருமை வினைமுற்று |
| குளிர் பொதிகை | – | வினைத்தொகை |

## VI. பகுபத உறுப்பிலக்கணம் :

| | | |
|---|---|---|
| 1. சாய்ப்பான் | – | சாய் + ப் + ப் + ஆன் |
| சாய் | – | பகுதி |
| ப் | – | சந்தி |
| ப் | – | எதிர்கால இடைநிலை |
| ஆன் | – | ஆண்பால் வினைமுற்று விகுதி |
| 2. விம்முகின்ற | – | விம்மு + கின்று + அ |
| விம்மு | – | பகுதி |
| கின்று | – | நிகழ்கால இடைநிலை |
| அ | – | பெயரெச்ச விகுதி |
| 3. வியந்து | – | விய + த் (ந்) + த் + உ |
| விய | – | பகுதி |
| த் | – | சந்தி : 'ந்' ஆனது விகாரம் |
| த் | – | இறந்தகால இடைநிலை |
| உ | – | வினையெச்ச விகுதி |
| 4. இருந்தாய் | – | இரு + த் (ந்) + த் + ஆய் |
| இரு | – | பகுதி. |
| த் | – | சந்தி : 'ந்' ஆனது விகாரம் |
| த் | – | இறந்தகால இடைநிலை |
| ஆய் | – | முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி |
| 5. சிவந்து | – | சிவ + த் (ந்) + த் + உ |
| சிவ | – | பகுதி |
| த் | – | சந்தி ; 'ந்' ஆனது விகாரம் |
| த் | – | இறந்தகால இடைநிலை |
| உ | – | வினையெச்ச விகுதி |

6. ஈன்று - ஈன் + ற் + உ
ஈன் - பகுதி
ற் - இறந்தகால இடைநிலை
உ - வினையெச்ச விகுதி

7. தந்தாய் - தா(து) + த் (ந்) + த் + ஆய்
தா - பகுதி, த எனக் குறுகியது விகாரம்
த் - சந்தி ; ந் ஆனது விகாரம்
த் - இறந்தகால இடைநிலை
ஆய் - முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி

8. உடைத்து - உடை + த் + த் + உ
உடை - பகுதி
த் - சந்தி
த் - இறந்தகால இடைநிலை
உ - வினையெச்ச விகுதி

9. எழுந்த - எழு + த் (ந்) + த் + அ
எழு - பகுதி
த் - சந்தி; 'ந்" ஆனது விகாரம்
த் - இறந்தகால இடைநிலை
அ - பெயரெச்ச விகுதி

## VII. புணர்ச்சி விதி

1. செம்பரிதி - செம்மை + பரிதி

| விதி | மாற்றம் |
|---|---|
| ஈறுபோதல் | செம் + பரிதி<br>**செம்பரிதி** என்றானது. |

2. வானமெல்லாம் - வானம் + எல்லாம்

| விதி | மாற்றம் |
|---|---|
| உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே | ம் + எ = மெ<br>**வானமெல்லாம்** என்றானது. |

3. உன்னையல்லால் - உன்னை + அல்லால்

| விதி | மாற்றம் |
|---|---|
| இ, ஈ, ஐ வழி யவ்வும் | உன்னை + ய் + அல்லால் |
| உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே | ய் + அ = ய<br>**உன்னையல்லால்** என்றானது. |

4. செந்தமிழே - செம்மை + தமிழே

| விதி | மாற்றம் |
|---|---|
| ஈறுபோதல் | செம் + தமிழே |
| முன்னின்ற மெய் திரிதல் | செந் + தமிழே<br>**செந்தமிழே** என்றானது. |

5. செந்நிறம் - செம்மை + நிறம்

| விதி | மாற்றம் |
|---|---|
| ஈறுபோதல் | செம் + நிறம் |
| முன்னின்ற மெய் திரிதல் | செந் + நிறம்<br>**செந்நிறம்** என்றானது. |

6. தாமுழைக்கும் - தாம் + உழைக்கும்

| விதி | மாற்றம் |
|---|---|
| உடல் மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே | ம் + உ = மு<br>**தாமுழைக்கும்** என்றானது. |

7. வீற்றிருக்கும் - வீற்று + இருக்கும்

| விதி | மாற்றம் |
|---|---|
| உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும் | வீற்ற் + இருக்கும் |
| உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே | ற் + இ = றி<br>**வீற்றிருக்கும்** என்றானது. |

8. அவையெல்லாம் - அவை + எல்லாம்

| விதி | மாற்றம் |
|---|---|
| இ ஈ ஐ வழி யவ்வும் | அவை + ய் + எல்லாம் |
| உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே | ய் + எ = யெ<br>**அவையெல்லாம்** என்றானது. |

9. வேறுண்டோ - வேறு + உண்டோ

| விதி | மாற்றம் |
|---|---|
| உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும் | வேற் + உண்டோ |
| உடல் மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே | ற் + உ = று<br>**வேறுண்டோ** என்றானது. |

10. கொலுவிருந்தாய் - கொலு + இருந்தாய்

| விதி | மாற்றம் |
|---|---|
| ஏனை உயிர்வழி வவ்வும் | கொலு + வ் + இருந்தாய் |
| உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே | வ் + இ = வி<br>**கொலுவிருந்தாய்** என்றானது. |

11. மீண்டுமந்த - மீண்டும் + அந்த

| விதி | மாற்றம் |
|---|---|
| உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே | ம் + அ = ம<br>**மீண்டுமந்த** என்றானது. |

12. கூண்டதனை - கூண்டு + அதனை

| விதி | மாற்றம் |
|---|---|
| உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும் | கூண்ட் + அதனை |
| உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே | ட் + அ = ட<br>**கூண்டதனை** என்றானது. |

13. தென்தமிழே - தெற்கு + தமிழே

| விதி | மாற்றம் |
|---|---|
| திசையொடு திசையும் பிறவும் சேரின் நிலையீற்று உயிர்மெய் நீங்கவும் | தெற் + தமிழே |
| றகரம் னல வாத்திரிதலும் ஆம்பிற | தென் + தமிழே<br>**தென்தமிழே** என்றானது. |

www.nammakalvi.in

14. உடைத்தெழுந்த - உடைத்து + எழுந்த

| விதி | மாற்றம் |
|---|---|
| உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும் | உடைத் + எழுந்த |
| உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே | த் + எ = தெ<br>**உடைத்தெழுந்த** என்றானது. |

15. முத்தமிழே - மூன்று + தமிழே

| விதி | மாற்றம் |
|---|---|
| மூன்று ஆறு ஏழு குறுகும் | மூன்று + தமிழே |
| ஆறு, ஏழு, அல்லவற்றின் ஈற்று உயிர்மெய் ஏகும் | முன் + தமிழே |
| மூன்றன் உறுப்பு அழிவு வந்ததும் ஆகும் | மு + த் + தமிழே<br>**முத்தமிழே** என்றானது. |

## கற்பவை கற்றபின்

**தமிழ்மொழிப் பாடத்தில் மொழி வாழ்த்துப் பாடல் இடம்பெறுவதன் நோக்கம் குறித்த கருத்துகளைத் தொகுத்துக் கலந்துரையாடல் நிகழ்த்துக.**

ஆசிரியர் : வணக்கம் மாணவர்களே! நாம் இப்போது நமது தமிழ்மொழிப் பாடத்தில் மொழி வாழ்த்துப் பாடல் இடம்பெறுவதன் நோக்கம் குறித்துப் பார்ப்போம்.

மாணவன் : வாழ்த்து என்றால் என்ன ஐயா?

ஆசிரியர் : ஒரு செயல் இனிதே நிறைவுற இறைவனையோ மற்றவற்றையோ வாழ்த்திப் பாடுவது வாழ்த்து ஆகும்.

மாணவன் : வாழ்த்துக்குரிய பொருள்கள் யாவை ஐயா?

ஆசிரியர் : தமிழர் மரபைப் பொருத்த வரையில் இறைவன், மொழி, நாடு ஆகிய மூன்றும் வாழ்த்துப் பொருளாக இருந்து வருகின்றன. அதன் நோக்கத்திலே நமது தமிழ் மொழிப்பாடத்தில் இறைவாழ்த்து, மொழிவாழ்த்து, நாட்டு வாழ்த்து இடம் பெறுகின்றன.

மாணவன் : நன்றி ஐயா! மொழி வாழ்த்துப் பாடலின் நோக்கம் குறித்துக் கூறுங்கள் ஐயா?

ஆசிரியர் : ஒரு நாட்டில் பிறந்த மக்களுக்கு வேண்டப்படும் பற்றுகளுள் தலையாய பற்று மொழிப்பற்றேயாகும். மொழிப்பற்று இல்லாதவரிடம் தேசப்பற்று இராதென்பது நிச்சயம். தேசம் என்பது மொழியை அடிப்படையாகக் கொண்டு இயங்குவது. அதனால் தான் தமிழர்களுக்குத் தாய்மொழிப் பற்று பெருக வேண்டும் என்ற கருத்து நிலவுகிறது.

மக்களுடைய வாழ்க்கைக்குப் பயன்படக்கூடியதும் அறிவையும் திறமையையும் தைரியத்தையும் உண்டாக்கக் கூடியதும் ஆகிய சிறந்த கலைகளையெல்லாம் தமிழில் எழுதிப் பரவச் செய்யவேண்டும். அதன் மூலம் மக்களுடைய அறிவையும், தமிழ் மொழியையும் செம்மை செய்ய இயலும்.

ஆகவே இத்தகைய மொழிப்பற்றே எல்லா பற்றிற்கும் ஆணிவேறாகத் திகழ்கிறது. எனவே, மொழிப்பற்றை வளர்க்கும் விதமாகத் தமிழ்மொழிப் பாடத்தில் மொழி வாழ்த்துப் பாடல் இடம்பெற்றுள்ளது.


மாணவன் : நன்றி ஐயா! நானும் இனிய எனது தாய்மொழியாகிய தமிழை நேசித்து, தமிழ்மொழியிலேயே எனது பேச்சையும் மூச்சையும் இறுதி வரை கொண்டு செல்வேன்! வாழ்க தமிழ்! வளர்க தமிழர்!

# இயல் 1

# தமிழ்மொழியின் நடை அழகியல்

## உரைநடை

– தி. சு. நடராசன்



## I. பலவுள் தெரிக:

1 மதிப்பெண் வினாக்கள்

### பாடநூல் வினாக்கள்:

1. இலக்கியத்தையும் மொழியையும் ஒரு சேரப் பேசுகின்ற இலக்கண நூல் ..................

அ) யாப்பருங்கலக்காரிகை ஆ) தண்டியலங்காரம்
இ) தொல்காப்பியம் ஈ) நன்னூல்

விடை: இ) தொல்காப்பியம்

2. கருத்து 1: இயல்பு வழக்கில், தொடரமைப்பு என்பது எழுவாய், பயனிலை என்று வருவதே மரபு.

கருத்து 2 : தொடரமைப்பு சங்கப் பாடல்கள் பலவற்றில் பிறழ்ந்து வருகிறது.

அ) கருத்து 1 சரி ஆ) கருத்து 2 சரி
இ) இரண்டு கருத்தும் சரி ஈ) கருத்து 1 சரி, 2 தவறு

விடை: இ) இரண்டு கருத்தும் சரி

### கூடுதல் வினாக்கள்:

3. தமிழில் இழுமெனும் மொழியால் விழுமியது பயக்கும் வகையில் .................. படைக்கப்பட்டுள்ளன.

அ) இதிகாசங்கள் ஆ) இலக்கியங்கள் இ) புராணங்கள் ஈ) காப்பியங்கள்

விடை: ஆ) இலக்கியங்கள்

4. 'தமிழ் மொழியின் நடை அழகியல்' என்ற நூலின் ஆசிரியர் ..................

அ) பக்தவத்சல பாரதி ஆ) உ.வே.சா
இ) தி.சு.நடராசன் ஈ) உத்தமசோழன்

விடை: இ) தி.ச. நடராசன்

5. இலக்கியத்தின் நோக்கம் அல்லது அறவியல் சார்ந்த கருத்து நிலைகள் போன்றவற்றைத் தெளிவாகச் சுட்டும் நூல் ..................

அ) புறநானூறு ஆ) அகநானூறு இ) கம்பராமாயணம் ஈ) தொல்காப்பியம்

விடை: ஈ) தொல்காப்பியம்

6. பா வகைகளோடு அறவியல் கருத்துக்களை இணைத்துச் சொல்லும் நூல் ..................

அ) திருக்குறள் ஆ) தொல்காப்பியம் இ) தேவாரம் ஈ) நன்னூல்

விடை: ஆ) தொல்காப்பியம்

7. ஒலிக்கோலங்களும், சொற்களின் புலமும் தொடரியல் போக்குகளும் காணப்படும் நடையியல் கூறு ..................

அ) கட்டுரை ஆ) செய்யுள் இ) கவிதை ஈ) உரைநடை

விடை: இ) கவிதை

8. நடை என்ற சொல்லைத் தெளிவான பார்வையோடு விளக்கும் நூல் ..................

அ) நன்னூல் ஆ) தொல்காப்பியம் இ) அகத்தியம் ஈ) வீரசோழியம்

விடை: ஆ) தொல்காப்பியம்

9. "ஆசிரிய நடைத்தே வஞ்சி: ஏனை வெண்பா நடைத்தே கலி" இவ்வரி இடம் பெறும் நூல் ..................

அ) தொல்காப்பியம் ஆ) புறநானூறு இ) கலித்தொகை ஈ) நற்றிணை

விடை: அ) தொல்காப்பியம்

10. "நுந்தை தந்தைக்கு இவன் தந்தை தந்தை" என்று பாடும் நூல் ..................

அ) நற்றிணை ஆ) புறநானூறு இ) அகநானூறு ஈ) கலித்தொகை

விடை: ஆ) புறநானூறு

11. கீழ்க்கண்டவற்றுள் தொகை மொழியைத் தேர்க.

அ) நெடுநீர் ஆ) கடல் இ) குளம் ஈ) ஆறு

விடை: அ) நெடுநீர்

12. தொகைநிலை ( Compound Words ) பற்றிப் பேசும் தொல்காப்பிய இயல் எது?

அ) அகத்திணையியல் ஆ) இடையியல்
இ) எச்சவியல் ஈ) மரபியல்

விடை: இ) எச்சவியல்

13. தமிழ் அழகியலைக் கட்டமைப்பதற்கு முதன்மை ஆதாரமாக விளங்குவது ..................

அ) சங்க இலக்கியம் ஆ) புறநானூறு
இ) காப்பியம் ஈ) இதிகாசகம்

விடை: அ) சங்க இலக்கியம்

14. பதினெட்டுப் பண்புகளை வரிசைப்படுத்தும் பாடல் இடம் பெற்றுள்ள நூல் ..................

அ) புறநானூறு ஆ) நற்றிணை இ) அகநானூறு ஈ) குறுந்தொகை

விடை: அ) புறநானூறு

## II. குறுவினாக்கள் :

2 மதிப்பெண் வினாக்கள்

### பாடநூல் வினாக்கள்:

1. விடியல், வனப்பு – இரு சொற்களையும் ஒருங்கிணைத்து தொடர் அமைக்க.

ஒரு நாளின் விடியல் பொழுது பறவைகளின் ஓசை, அமைதி, குளிர் என வனப்பு மிகுந்ததாக இருக்கும்.

2. நடை அழகியல் பற்றித் தொல்காப்பியத்தின் கருத்தைக் குறிப்பிடுக.

'நடைபெற்றியலும்', 'நடைநவின்றொழுகும்' போல, சில சொற்றொடர்களைத் தொல்காப்பியம் கையாண்டிருக்கிறது,

ஆசிரிய நடைத்தே வஞ்சி; ஏனை
வெண்பா நடைத்தே கலி

என்றும் சொல்லுகிறது. ஆகவே நடை என்ற சொல் தெளிவான பார்வையோடு இங்கும் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது.

3. "பாடஅம் ஈத்த கெடாஅ நல்லிசைக்
கடாஅ யானைக் கலிமான் பேக"– இச் சங்க கவிதையின் அடிகளில் ஓசை நயமிக்க சொற்களையும் அவற்றிற்கான இலக்கணக் குறிப்புகளையும் எடுத்து எழுதுக

ஈத்த – பெயரெச்சம்

பாடஅம்
கெடா அ
கடா அ
} – செய்யுளிசை அளபெடை

### கூடுதல் வினாக்கள்:

4. அழகியலை உருவாக்குவதற்குத் தளம் அமைத்துத் தரும் தொல்காப்பியம், என்பதை விளக்குக.

இலக்கியத்தையும் மொழியையும் ஒரு சேரப் பேசுகின்ற இலக்கணநூல் தொல்காப்பியமாகும். எழுத்துகள் பற்றிப் பேசுகிற போதே, செய்யுளின் வழக்கு பேசப்பட்டு விடுகிறது. எழுத்தையும் சொல்லையும் போன்றே செய்யுளையும் ஓர் உள்ளமைப்பாகத் தொல்காப்பியம் கருதுகிறது.

5. மொழியின் இயல்பு வழக்குகளைக் கலையியல் வழக்குகளாக மாற்றுபவை எவை?

உவமம், உருவகம், எச்சம், குறிப்பு, உள்ளுறை, இறைச்சி, முதலியவை மொழியின் இயல்பு வழக்குகளைக் கலையியல் வழக்குகளாக மாற்றுபவை ஆகும்.

6. 'கலை முழுமை' என்றால் என்ன? M-20

தொல்காப்பியம் மிகவும் தெளிவாக, இலக்கியத்தின் நோக்கம் அல்லது அறிவியல் சார்ந்த கருத்துநிலைகள் கலை உருவாக்கத்தின் போதே சரிவர இணைந்திருக்க வேண்டும் என்பதனைச் சுட்டியுள்ளது. இத்தகையதொரு முழுமையை தான் – கலை முழுமை என்கிறோம்.

7. சங்க இலக்கியத்தின் பாடற்பொருள்கள் எவை?

சங்க இலக்கியம் அகத்திணை சார்ந்த செய்திகளையும் புறத்திணை சார்ந்த செய்திகளையும் பாடற்பொருள்களாக அமைக்கப் பெற்றுள்ளது.

8. கவிதை மறுதலைத் தொடர் – விளக்குக. PTA

உரைநடை வழக்கு, பேச்சு வழக்கு உள்ளிட்ட இயல்பு வழக்கில் தொடரமைப்பு என்பது எழுவாய் + செயப்படுபொருள் அல்லது பிறவற்றுடன் கூடிய அமைப்பு + பயனிலை என்று வருவதே மரபு.

ஆனால், சங்கப் பாடல்கள் பலவற்றில் இது பிறழ்ந்து வருகிறது. இதுவே மறுதலைத் தொடராகும்.

**9. சொல்வளம் என்பது யாது?**

சொல்வளம் என்பது தனிச்சொற்களாய் நிறைந்து அமைவதைக் குறிக்கும்; ஒன்றிற்கு மேற்பட்ட சொற்கள் கவவுக்கை நெகிழாமல் முயங்கிக் கிடப்பதையும் குறிக்கும்.

**10. தமிழில் சில தொகை மொழிகளைப் பட்டியலிடுக.**

நெடுநீர், சின்னீர், பனிநீர், ஒலி வெள்ளருவி, பறைக்குரல் எழிலி, நகைக்கூட்டம், ஒவச்செய்தி ஆகியவை சில தொகைமொழிகள் ஆகும்.

## III. சிறுவினா :

4 மதிப்பெண் வினாக்கள்

**பாடநூல் வினா:**

**1. சங்கப் பாடல்களில் ஒலிக்கோலம் குறிப்பிடத்தக்க ஒரு பண்பாகும் – விளக்குக.** PTA

* உயிர் ஒலிகள் – குறிப்பாக நெடில் ஒலிகளின் வருகையும், சில ஒலிகளும் சில சொற்களும் திரும்பி வரும் தன்மையைப் பெற்றிருப்பதும் உண்டு.
* இவற்றோடு சேர்ந்து நிகழ்த்தப் பெறும் சொல் விளையாட்டுகளும் இங்கே கவனத்திற்குரியன. இத்தகைய ஒலிக்கோலம் சங்கப் பாடல்களில் முக்கியமான ஒரு பண்பாகத் திகழ்கிறது.
* "பாடஅம் ஈத்த கெடாஅ நல்லிசை"– புறம்
  "நுந்தை தந்தைக்கு இவன் தந்தை தந்தை" – புறம்

  இப் பாடலடிகளை ஒப்பிட்டுப் பார்த்து ஒலிக்கோலத்தின் வலிமையை நாம் அறிந்து கொள்ளலாம்.

**கூடுதல் வினாக்கள்:**

**2. தமிழ் அழகியிலின் நெடும் பரப்புக் குறித்து எழுதுக.**

* "செவ்வியல் இலக்கியம்" கட்டமைக்க விரும்பிய அறம் இது.
* சமூக – பண்பாட்டு மரபிற்கேற்பவே, கலைப் படைப்பை அழகியல் நெறியை – பண்பாட்டின் இலச்சினையாகச் சித்தரிப்பதற்குத் தமிழ் மரபு முன் வந்திருக்கிறது. இது தமிழ் அழகியலின் நெடும் பரப்பு ஆகும்.

**3. நடையியல் குறித்து விளக்கம் தருக.**

* பாட்டு அல்லது கவிதையின் நடையியல் கூறுகளில், ஒலிக்கோலங்களும் சொற்களின் புலமும் தொடரியல் போக்குகளும் மிக முக்கியமானவை.
* மொழியின் தனிச் சிறப்பான கூறுகளும் அவற்றைக் கையாளுகின்ற வகைமைகளும் கவிதையின் உந்துசக்தியாக அமைகின்றன.
* மொழிக்குள் இருக்கும் ஒரு வலிமைமிக்க ஆற்றல், கவிதைக்காக, இலக்கியத்துக்காகத் தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறது.
* கவிதையின் இயங்காற்றல் தான் நடை. தொல்காப்பியமும் பிற இலக்கணங்களும் அவ்வாறே கருதுகின்றன.

**4. தொடரியல் போக்குகள் குறித்து விளக்குக.**

* பரிமாறப்படும் உணர்வுகளுக்கும் செய்திகளுக்கும் ஏற்பத் தொடர்கள் நேர் நடந்தும் ஏறியிறங்கியும் திரும்பியும் சுழன்றும் இயங்குகின்றன.
* உரைநடை வழக்கு, பேச்சு வழக்கு உள்ளிட்ட இயல்பு வழக்கில், தொடரமைப்பு என்பது, எழுவாய், செயப்படுபொருள் அல்லது பிறவற்றுடன் கூடிய அமைப்பு + பயனிலை என்று வருவதே மரபு.
* முத்தாய்ப்பாக முடியும் பாடலின் இறுதியில் தான் இந்தத் தொடரியல் பிறழ்வுநிலை பெரிதும் காணப்படுகிறது.

5. தி.சு.நடராசன் – குறிப்பு வரைக.

திறனாய்வுக் கலையைத் தமிழுக்கு அறிமுகப்படுத்தியவர்களில் குறிப்பிடத்தக்கவர் இவர். மதுரை காமராசர், வார்சா, மனோன்மணீயம் ஆகிய பல்கலைக்கழகங்களில் தமிழ்ப் பேராசிரியராகப் பணிபுரிந்தவர்.

கவிதையெனும் மொழி, திறனாய்வுக் கலை, தமிழ் அழகியல், தமிழன் பண்பாட்டு வெளிகள் உள்ளிட்ட நூல்களை இயற்றியுள்ளார்.

## IV. நெடுவினா:

6 மதிப்பெண் வினாக்கள்

பாடநூல் வினா:

1. கவிதையின் நடையைக் கட்டமைக்கும் அழகியல் கூறுகளை எடுத்துக்காட்டி விளக்குக.

**குறிப்புச்சட்டகம்** PTA

முன்னுரை
ஒலிக்கோலங்கள்
சொற்களின் புலம்
தொடரியல் போக்குகள்
முடிவுரை

**முன்னுரை :**

பாட்டு அல்லது கவிதையின் நடையியல் கூறுகளில், ஒலிக்கோலங்கள், சொற்களின் புலம், தொடரியல் போக்குப் போன்றவை மிக முக்கியமானவையாகும். அவற்றைப்பற்றி இங்குக் காண்போம்.

**ஒலிக்கோலங்கள்:**

எத்தகைய தொன்மையான மொழியும் சமிக்ஞையிலிருந்தும் இசையிலுருந்தும் தான் தொடங்குகிறது. மொழி சார்ந்த கவிதையும் இசையோடும் இசைக் கருவியோடும் தான் பிறக்கிறது. ஓசையும் பொருளும் இணைந்து கலை வடிவம் கொள்கின்றன. இதனையே அந்தப் பனுவலின் ஒலிப்பின்னல் என்கிறோம்.

உயிர் ஒலிகள் – குறிப்பான நெடில் ஒலிகளின் வருகையும், சில ஒலிகளும் சில சொற்களும் திரும்பவரல் தன்மையைப் பெற்றிருக்கிறது. இவற்றோடு சேர்ந்து நிகழ்த்தப் பெறும் சொல் விளையாட்டுகளும் இங்கே கவனத்திற்குரியன. இந்த ஒலிக்கோலம் சங்கப் பாடல்களில் முக்கியமான ஒரு பண்பான விளங்குகிறது.

**சொற்புலம் :**

சொல்லில் தான் உணர்வும் பொருளும் பொதிந்து கிடக்கின்றன; கலையும் பண்பாட்டு வரலாறும் அரசியலும் பொதிந்து கிடக்கின்றன.

சொல்வளம் என்பது, ஒரு பொருள் குறித்து வரும் பல சொல்லாய், பல பொருள் குறித்து வரும் ஒரு சொல்லாய் வருதலும் உண்டும். சூழல், புனைவுகளுக்கு உரியதாய் வருதலும், உணர்வு தெளிவும் கொண்டதாகி வருதலும் சொல்லின் செழிப்பைக் குறிக்கும்.

சொல்வளம் என்பது தனிச் சொற்களாய் நிறைந்து அமைவதையும் குறிக்கும். ஒன்றிற்கு மேற்பட்ட சொற்கள் சேர்ந்து அமைவதையும் குறிக்கும்.

**தொடரியல் போக்குகள் :**

பரிமாறப்படும் உணர்வுகளுக்கும், செய்திகளுக்கும் ஏற்ப தொடர்கள் நேர் நடந்தும் ஏறியிறங்கியும், திரும்பியும், சுழன்றும் இயங்குகின்றன.

உரைநடை வழக்கு, பேச்சு வழக்கு உள்ளிட்ட இயல்பு வழக்கில், தொடரமைப்பு என்பது எழுவாய் + செயப்படுபொருள் அல்லது பிறவற்றுடன் கூடிய அமைப்பு + பயனிலை என்று வருவதே மரபு. ஆனால், சங்கப்பாடல்கள் பலவற்றில் இது பிறழ்ந்து வருகிறது. ஆகவே, இது கவிதை மறுதலைத் தொடராகும்.

**முடிவுரை :**

இவ்வாறு கவிதை நடையைக் கட்டமைப்பதில் அழகியல் கூறுகள் எவ்வாறு முக்கிய இடத்தைப் பெறுகின்றன என்பதைக் கண்டோம்.

## கற்பவை கற்றபின்

தமிழின் சொல்வளத்தை வெளிப்படுத்தும் படியாக யானை / மலர் குறித்த பல சொற்களை அகராதியில் கண்டு பட்டியலிடுக.

**யானை**

* வேழம்
* களிறு
* களபம்
* மாதங்கம்
* கைம்மா
* உம்பர்
* உம்பல்
* அஞ்சனாவதி
* அரசுவா
* அல்லியன்
* அறுபடை
* ஆனை
* இபம்,
* குஞ்சரம்
* இருள்
* தும்பு
* வல் விலங்கு
* தூங்கல்
* தோல்
* பெருமா
* வாரணம்
* புழைக்கை/ பூட்கை
* ஒருத்தல்
* ஓங்கல்
* நாக
* பொங்கடி
* கும்பி
* தும்பி
* நால்வாய்
* உவா
* கரி
* கள்வன்
* கயம்
* சிந்துரம்
* வயமா
* புகர் முகம்
* தந்தி
* மதாவளம்
* தந்தாவளம்
* கைம்மலை
* வழவை
* மந்தமா
* மதகயம்
* போதகம்
* பூதநாதன்
* மதோற்கடம்
* கடகம்
* கயந்தலை
* போதகம்
* துடியடி
* களபம்
* கயமுனி

**மலர்**

* அரும்பு,
* நனை
* முகை
* மொக்குள்
* போது
* முகிழ்
* மலர்
* மகரந்தம்
* அலர்
* பொதும்பர்
* வீதி
* பொம்மல்
* செம்மலர்
* புஷ்பம்
* நறுவி

மொழி - உயிரினும் ஓம்பப் படும்

# இயல் 1

# தன்னேர் இலாத தமிழ்

## தண்டியலங்காரம்

### செய்யுள்

– தண்டி

**நூற்குறிப்பு :**

**தண்டியலங்காரம் :**



* தமிழில் ஐவகை இலக்கணங்களான எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்பனவற்றில் அணி இலக்கணத்தை விளக்க எழுந்த நூல் தண்டியலங்காரம் ஆகும்.
* இந்நூல் காவியதர்சம் என்னும் வடமொழி இலக்கண நூலைத் தழுவி எழுதப்பட்டது,
* இந்நூலின் ஆசிரியர் தண்டி என்னும் புலவர் ஆவார்.
* இந்நூல் பொதுவியல், பொருளணியியல், சொல்லணியியல் என மூன்று பெரும் பிரிவுகளை உடையது.
* இலக்கண நூலார், உரையாசிரியர்கள் ஆகியோர் பலரால் எடுத்தாளப்பட்ட பெருமை பெற்றது.
* பொதுவியல் நான்கு வகையான செய்யுள்கள் பற்றியும், பொருளணியியல் 37 வகையான அணிகளின் இலக்கணம் பற்றியும்; சொல்லணியியல் மடக்கு, சித்திரகவி, வழக்குகளின் வகைகள் ஆகியவைப் பற்றியும் விளக்குகிறது.

**ஆசிரியர் குறிப்பு :**

* தண்டி என்னும் புலவர் பல்லவர் ஆட்சிக் காலத்தில் காஞ்சிபுரத்தில் வாழ்ந்து வந்தார்.
* இவர் வடமொழியில் 'தண்டியலங்காரம்' என்னும் நூலை இயற்றினார்.
* இந்த நூலைத் தழுவித் தமிழில் தண்டியலங்காரம் என்னும் நூல் தோன்றியது,
* தமிழில் எழுதப்பட்ட இந்த நூல் தண்டியலங்காரம் என்னும் பெயரைப் பெற்றது.
* தமிழில் தண்டியலங்காரம் செய்த ஆசிரியர் பெயர் தெரியவில்லை,
* தண்டி எழுதிய வடமொழி நூல்கள் :
  1. தண்டியலங்காரம்
  2. காவிய தர்சம்
  3. அவந்தி சுந்தரி

**ஓங்கலிடை வந்து உயர்ந்தோர் தொழவிளங்கி**
**ஏங்கொலிநீர் ஞாலத்(து) இருளகற்றும் – ஆங்கவற்றுள்**
**மின்னேர் தனியாழி வெங்கதிரொன்(று) ஏனையது**
**தன்னேர் இலாத தமிழ் !**

**சொல்லும் பொருளும்:**

| | | |
|---|---|---|
| ஓங்கலிடை வந்து | – | உயர்ந்த மலையில் தோன்றி |
| உயர்ந்தோர் தொழ விளங்கி | – | சான்றோர்களால் தொழப்பட்டு |

| | | |
|---|---|---|
| ஏங்கொலிநீர் ஞாலத்து | – | கடல் சூழ்ந்த இவ்வுலகின் |
| இருளகற்றும் | – | இருளைப் போக்கும் (மன இருளையும், உலகின் புற இருளையும்) |
| ஆங்கவற்றுள் | – | அத்தகைய அவற்றுள் |
| மின்னோர் தனியாழி வெங்கதிரொன்று | – | மலையிடையில் தோன்றும் கதிரவன் ஒன்று |
| ஏனையது தன்னேர் | – | மற்றொன்று தனக்கு நிகரில்லாத தமிழ். |

**தெளிவுரை :**

மக்களால் போற்றப்பட்டு, உயர்ந்த மலைகளுக்கு இடையே தோன்றி, கடலால் சூழப்பட்ட இவ்வுலகத்தின் புற இருளைப் போக்குவது ஒன்று. பொதிகை மலையில் தோன்றி, ஆன்றோரால் தொழப்பட்டு, மக்களின் அறியாமை என்றும் அக இருளைப் போக்குவதோடு ஒப்புவமை இல்லாததுமாக இருப்பது இன்னொன்று. இருளைப் போக்கும் இவ்விரண்டில் ஒன்று ஒளிர்கின்ற கதிரவன்; மற்றொன்று தனக்கு நிகரில்லாத தமிழ்.

**அருஞ்சொற்பொருள்:**

| | | |
|---|---|---|
| 1. ஓங்கல் | – | மலை |
| 2. இடை | – | இடையில் |
| 3. உயர்ந்தோரால் | – | சான்றோரால் |
| 4. தொழ | – | வணங்க |
| 5. ஏங்கொலிநீர் | – | ஓசை நிறைந்த கடல் |
| 6. ஞாலம் | – | உலகம் |
| 7. வெங்கதிர் | – | வெம்மை தரும் சூரிய ஒளி |
| 8. தன்னேர் | – | தனக்கு நிகரில்லாத |

## I. பலவுள் தெரிக:

1 மதிப்பெண் வினாக்கள்

**பாடநூல் வினா:**

1. "மின்னோர் தனியாழி வெங்கதிரொன்று ஏனையது தன்னேர் இலாத தமிழ் !" – இவ்வடிகளில் பயின்று வந்துள்ள தொடை நயம் ........................
அ) அடிமோனை, அடிஎதுகை
ஆ) சீர்மோனை, சீர்எதுகை
இ) அடி எதுகை, சீர்மோனை
ஈ) சீர்எதுகை, அடிமோனை
**விடை:** இ) அடி எதுகை, சீர்மோனை

**கூடுதல் வினாக்கள்:**

2. வானம் அளந்து, அனைத்தையும் அளக்கும் வலிமை மிக்கது ........................
அ) கடல் ஆ) தமிழ் இ) வானம் ஈ) நூல்
**விடை:** ஆ) தமிழ்

3. தமிழின் விரிவை ........................ எனப் போற்றுவர்.
அ) நிலம் ஆ) கடல் இ) வானம் ஈ) மலை
**விடை:** இ) வானம்

4. 'ஓங்கலிடை' எனத்தொடங்கும் தண்டியின் பாடலுக்குரிய பா வகை ........................
அ) இன்னிசை வெண்பா
ஆ) நேரிசை வெண்பா
இ) ஆசிரியப்பா
ஈ) வஞ்சிப்பா
**விடை:** ஆ) நேரிசை வெண்பா

Don

www.nammakalvi.in

5. 'ஏங்கொலிநீர்' பொருள் தருக

அ) ஆகாயம் ஆ) மலை இ) பூ ஈ) கடல்

விடை: ஈ) கடல்

6. தண்டியலங்கார நூலின் ஆசிரியர் ........................

அ) தொல்காப்பியர் ஆ) அகத்தியர்
இ) தண்டி ஈ) பவனந்தி முனிவர்

விடை: (இ) தண்டி

7. தண்டியலங்காரம் ........................ என்னும் வடமொழி இலக்கண நூலைத் தழுவி எழுதப்பட்டதாகும்.

அ) நேமிநாதம் ஆ) அவந்தி சுந்தரி இ) காவியதர்சம் ஈ) மேகசந்தேசம்

விடை: இ)காவியதர்சம்

8. அணிகளின் இலக்கணம் பற்றி மட்டும் கூறும் நூல் ........................ .

அ) அகப்பொருள் விளக்கம் ஆ) தொல்காப்பியம்
இ) புறப்பொருள் வெண்பாமாலை ஈ) தண்டியலங்காரம்

விடை: ஈ) தண்டியலங்காரம்

9. 'வெங்கதிர்' இச்சொல்லின் இலக்கணக் குறிப்பு தருக.

அ வினைத்தொகை ஆ) எண்ணும்மை
இ) பண்புத்தொகை ஈ) வினையாலணையும் பெயர்

விடை: இ) பண்புத்தொகை

10. "உயர்ந்தோர்" இச்சொல்லைப் பிரிக்கும் முறை........................

அ) உயர் + ந் + தோர் ஆ) உயர் + த்(ந்) + த் + ஓர்
இ) உயர்ந்து + ஓர் ஈ) உயர் + த்(ந்) + தோர்

விடை: ஆ) உயர் + த்(ந்) + த் + ஓர்

11. உலகின் புற இருளை அகற்றுவது ........................ .

அ) தமிழ் ஆ) ஞாயிறு இ) திங்கள் ஈ) விளக்கு

விடை: (ஆ) ஞாயிறு

12. ஓங்கலிடை வந்து உயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத்(து) இருளகற்றும் – இவ்வடிகளில் பயின்று வந்துள்ள தொடைநயம்

அ) அடி எதுகை ஆ) அடி மோனை இ) சீர் எதுகை ஈ) சீர்மோனை

விடை: அ)அடி எதுகை

13. பொருத்துக.

| சொல் | | பொருள் |
|---|---|---|
| அ) ஓங்கல் | – | i) தன்னிகரில்லாத |
| ஆ) தொழுதல் | – | ii) உலகம் |
| இ) ஞாலம் | – | iii) வணங்குதல் |
| ஈ) தன்னோர் | – | iv) மலை |

| | (அ) | (ஆ) | (இ) | (ஈ) |
|---|---|---|---|---|
| 1) | (iv) | (iii) | (ii) | (i) |
| 2) | (iii) | (ii) | (iv) | (i) |
| 3) | (iv) | (ii) | (i) | (iii) |
| 4) | (ii) | (ii) | (iv) | (iii) |

விடை: 1) (iv) (iii) (ii) (i)

## II. குறுவினாக்கள் :

2 மதிப்பெண் வினாக்கள்

**கூடுதல் வினாக்கள்:**

1. வேற்றுமை அணி என்றால் என்ன?

இருவேறு பொருள்களுக்கான ஒற்றுமையை முதலில் கூறி, பின் வேறுபடுத்திக் காட்டுவது வேற்றுமை அணி எனப்படும்.

2. தண்டி – குறிப்பு எழுதுக.

* தண்டியலங்காரம் என்றும் அணியிலக்கண நூலை இயற்றியவர். இவர் வடமொழிப்புலவர்.
* இவரது காலம் கி.பி. 12–ஆம் நூற்றாண்டு.
* காவியதர்சம், அவந்தி சுந்தரி ஆகிய வடமொழி நூல்களை இயற்றியவர்.

3. அணியிலக்கணத்தை மட்டுமே கூறும் இலக்கண நூல்கள் யாவை?

* தண்டியலங்காரம்
* மாறனலங்காரம்
* குவலயானந்தம்

4. அணியிலக்கணத்தோடு பிற இலக்கணங்களையும் கூறும் நூற்கள் எவை?

* தொல்காப்பியம்
* வீரசோழியம்
* இலக்கண விளக்கம்
* தொன்னூல் விளக்கம்
* முத்துவீரியம்

## III. சிறுவினாக்கள் :

4 மதிப்பெண் வினாக்கள்

**பாடநூல் வினாக்கள்:**

1. ஏங்கொலிநீர் ஞாலத்து இருளகற்றும் – இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக. M-20

**இடம் :**

இவ்வடி இடம்பெற்ற நூல் தண்டியலங்காரம் என்னும் அணியிலக்கண நூலாகும். அந்நூலில் உரை மேற்கோள் பாடலில் இவ்வடி இடம் பெற்றுள்ளது.

**பொருள்**

ஓசையினை உடைய அலைகள் வீசும் கடல் சூழ்ந்த இவ்வுலகத்தின் புற இருளை அகற்றும், என்பது இவ்வடியின் பொருளாகும்.

**விளக்கம்**

மக்களால் போற்றப்பட்டு, உயர்ந்த மலைகளுக்கு இடையே தோன்றி, கடலால் சூழப்பட்ட உலகத்தின் புற இருளை அகற்றுவது ஒன்று. பொதிகை மலையில் தோன்றி, சான்றோரால் தொழப்பட்டு, மக்களின் அறியாமை என்னும் அக இருளைப் போக்குவதோடு ஒப்புவமை இல்லாததுமாக இருப்பது இன்னொன்று. இருளைப் போக்கும் இவ்விரண்டில் ஒன்று ஒளிர்கின்ற கதிரவன்; இன்னொன்று தனக்கு நிகரில்லாத தமிழ்.

**கூடுதல் வினாக்கள்:**

2. தண்டியலங்காரம் – நூற்குறிப்புத் தருக.

* அணி இலக்கணத்தைப் பற்றிக் கூறும் சிறப்பான நூல்களுள் ஒன்று.
* காவியதர்சம் என்னும் வடமொழி இலக்கண நூலைத் தழுவி எழுதப்பட்ட நூலாகும்.
* இந்நூல் பொதுவியல், பொருளணியியல், சொல்லணியியல் என மூன்று பெரும் பிரிவுகளை உடையது.
* இலக்கண நூலார், உரையாசிரியர்கள் ஆகியோர் பலரால் எடுத்தாளப் பெற்ற பெருமை உடையது.

3. தண்டியலங்கார உரை மேற்கோள் பாடல் கூறும் செய்தியினை விளக்குக.

மக்களால் போற்றப்பட்டு, உயர்ந்த மலைகளுக்கு இடையே தோன்றி, கடலால் சூழப்பட்ட உலகத்தின் புற இருளை அகற்றுவது ஒன்று. இருளைப் போக்கும் இவ்விரண்டில் ஒன்று ஒளிர்கின்ற கதிரவன். பொதிகை மலையில் தோன்றி, சான்றோரால் தொழப்பட்டு, மக்களின் அறியாமை என்னும் அக இருளைப் போக்குவதோடு ஒப்புவமை இல்லாததுமாக இருப்பது இன்னொன்று என்பது தண்டியலங்கார உரை மேற்கோள் பாடல் கூறும் செய்தியாகும்.

4. பொருள் வேற்றுமையணியை விளக்குக. PTA

**அணி இலக்கணம்:**

இருவேறு பொருள்களுக்கிடையே ஒற்றுமையை முதலில் கூறிப் பின் வேறுபடுத்திக் காட்டுவது பொருள் வேற்றுமை அணி எனப்படும்.

**எடுத்துக்காட்டு:**

ஓங்கலிடை வந்து உயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத்(து) இருளகற்றும் – ஆங்கவற்றுள்
மின்னேர் தனியாழி வெங்கதிரொன்(று) ஏனையது
தன்னேர் இலாத தமிழ்.

**அணி விளக்கம்:**

தமிழுக்கும் கதிரவனுக்கும் இடையே உள்ள பயன் சார்ந்த ஒற்றுமையை முதலில் கூறி அவற்றுள் தமிழ் தன்னேரிலாதது என்ற தன்மையைப் பின்னர் வேறுபடுத்திக் காட்டுவதால் இது பொருள் வேற்றுமை அணி ஆயிற்று. இது வேற்றுமை அணியின் ஒரு பிரிவாகும்.

## IV. இலக்கணக் குறிப்பு :

| | | |
|---|---|---|
| 1. வெங்கதிர் | – | பண்புத்தொகை |
| 2. உயர்ந்தோர் | – | வினையாலணையும் பெயர் |
| 3. இலாத | – | இடைக்குறை (இல்லாத) |
| 4. இருளகற்றும் | – | இரண்டாம் வேற்றுமைத் தொகை |
| 5. வந்து | – | வினையெச்சம் |
| 6. தன்னேர் | – | நான்காம் வேற்றுமைத் தொகை |

## V. பகுபத உறுப்பிலக்கணம் :

| | | |
|---|---|---|
| 1. வந்து | – | வா (வ) + த் (ந்) + த் + உ |
| வா | – | பகுதி; 'வ' எனக் குறுகியது விகாரம் |
| ந் | – | சந்தி; 'ந்' ஆனது விகாரம் |
| த் | – | இறந்தகால இடைநிலை |
| உ | – | வினையெச்ச விகுதி |
| 2. உயர்ந்தோர் | – | உயர் + த் (ந்) + த் + ஓர் |
| உயர் | – | பகுதி |
| த் | – | சந்தி; 'ந்' ஆனது விகாரம் |
| த் | – | இறந்தகால இடைநிலை |
| ஓர் | – | பலர்பால் வினைமுற்று விகுதி |
| 3. விளக்கி | – | விளக்கு + இ |
| விளக்கு | – | பகுதி |
| இ | – | வினையெச்ச விகுதி |

## VI. புணர்ச்சி :

1. ஆங்கவற்றுள் – ஆங்கு + அவற்றுள்

| விதி | மாற்றம் |
|---|---|
| உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும் | ஆங்க் + அவற்றுள் |
| உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே | க் + அ = க<br>**ஆங்கவற்றுள்** என்றானது. |

2. தனியாழி – தனி + ஆழி

| விதி | மாற்றம் |
|---|---|
| இ ஈ ஐ வழி யவ்வும் | தனி + ய் + ஆழி |
| உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே | ய் + ஆ = யா<br>**தனியாழி** என்றானது. |

3. வெங்கதிர் – வெம்மை + கதிர்

| விதி | மாற்றம் |
|---|---|
| ஈறுபோதல் | வெம் + கதிர் |
| முன்னின்ற மெய்திரிதல் | வெங் + கதிர்<br>**வெங்கதிர்** என்றானது. |

4. இருளகற்றும் – இருள் + அகற்றும்

| விதி | மாற்றம் |
|---|---|
| உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே | ள் + அ = ள<br>**இருளகற்றும்** என்றானது. |

5. ஏனையது – ஏனை + அது

| விதி | மாற்றம் |
|---|---|
| இ ஈ ஐ வழி யவ்வும் | ஏனை + ய் + அது |
| உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே | ய் + அ = ய<br>**ஏனையது** என்றானது. |

6. ஒங்கலிடை – ஒங்கல் + இடை

| விதி | மாற்றம் |
|---|---|
| உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே | ல் + இ = லி<br>**ஒங்கலிடை** என்றானது. |

## கற்பவை கற்றபின்

1. வேற்றுமை அணி பயின்று வரும் இரு பாடல்களை விளக்கத்துடன் எழுதி வருக. PTA

**பாடல் 1**

**அணி இலக்கணம்:**

வேற்றுமை அணி என்பது இரு பொருள்களுக்கு இடையே உள்ள ஒற்றுமையைக் கூறி, பின் அவற்றை வேறுபடுத்திக் காட்டுவது ஆகும்.

சான்று:

அங்கன் விசும்பின்
அகனிலாப் பாரிக்கும்
திங்களும் சான்றோரும்
ஒப்பர்மன் – திங்கள்
மறுவாற்றும் சான்றோர்
அஃதாற்றார் தெருமத்து
தேய்வர் ஒரு மாசுறின்

சான்று விளக்கம்:

அழகிய இடமாகின்ற வானத்தில் விரிந்த நிலவொளியைப் பரவச் செய்யும் திங்களும் மேன்மக்களும் தம்மில் பெரும்பாலும் ஒத்த பெருமையுடையவராவர். ஆனால் நிலவு களங்கத்தைத் தாங்கும்; மேன்மக்கள் தமது ஒழுக்கத்தில் சிறிது கறையுண்டால் அது மனம் பொறுக்காமல் உள்ளங்குழம்பி அழிவர்.

அணிப்பொருத்தம்:

இச்செய்யுளில் சான்றோருக்கும் திங்களுக்கும் முதலில் ஒற்றுமை கூறிப் பின்னர் திங்கள் தேயும், ஆனால் சான்றோர் தன்நிலை மாறார் என்று வேற்றுமைப்படுத்திக் கூறுவது வேற்றுமை அணியாகும்.

பாடல் 2

அணி இலக்கணம்:

வேற்றுமை அணி என்பது இரு பொருள்களுக்கு இடையே உள்ள ஒற்றுமையைக் கூறி, பின் அவற்றை வேறுபடுத்திக் காட்டுவது ஆகும்.

சான்று:

"தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினால் சுட்ட வடு"

சான்று விளக்கம்:

தீயினால் ஏற்பட்ட புண் வெளியே வடுவாக இருந்த போதிலும் உள்ளே ஆறிவிடும்; ஆனால் வெறுப்புக் கொண்டு திட்டிய சொற்களால் விளைந்த துன்பம் என்றும் ஆறவே ஆறாது.

அணிப்பொருத்தம்:

இக்குறட்பாவில் தீயினால் ஏற்பட்ட புண்ணுக்கும் நாவினால் ஏற்பட்ட புண்ணுக்கும் முதலில் ஒற்றுமையைக் கூறி, தீப்புண் ஆறிவிடும், தீச்சொல்லால் ஏற்பட்ட புண் ஆறாது என வேறுபடுத்திப் பாடியமையால் இது வேற்றுமை அணியாகும்.

2. 'தன்னேர் இலாத தமிழ்' – என்னும் தலைப்பில் சொற்போரில் பங்கேற்பதற்கான ஐந்து நிமிட உரை உருவாக்குக.

ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள் தொன்மையும், பல ஆயிரம் ஆயிரம் துறைகளும், எண்ணிலடங்கா நூல்களும், ஏற்றமிகு கருத்துகளும், எட்டுத்திசையிலும் காணக்கிடைக்காத மாணிக்க தமிழே. எங்கள் பாட்டன், முப்பாட்டன், பூட்டன் காலத்து முதல் இன்று வரை வாழும் இளந்தமிழே! வாழ்க!

தொன்மையிலும் சரி, வளமையிலும் சரி, வலிமையிலும் சரி! எந்திசை மொழியும் ஈடாகாத என் தன்னேர் இலாத தமிழே!

பல கோடி மக்கள் கைகூப்பி, பல ஆயிரம் புலவர்கள் வாய்பேசி, பலநூறு மன்னர்கள் அவையை அலங்கரித்த ....தென் தமிழே!

செய்யுள், காப்பியம், இதிகாசம், புராணம், புதினம், கவிதை, கதை எனப் பல தளங்களில் தவழும் தமிழே! தனக்கு நிகர் இல்லாத தமிழே! செந்தமிழே! பைந்தமிழே! தீந்தமிழே! வண்டமிழே! ஒண்தமிழே! முத்தமிழே உனைப்போல யாருண்டு இவ்வுலகில்!

* * * * * * * * * *

மொழி - உயிரினும் ஓம்பப் படும்

# இயல் 1

# தம்பி நெல்லையப்பருக்கு

பாரதியின் கடிதம்

## துணைப்பாடம்

– பாரதியார்

## I. பலவுள் தெரிக

1 மதிப்பெண் வினாக்கள்

**பாடநூல் வினா:**

1. பொருத்துக : PTA

அ) தமிழ் அழகியல் – 1. பரலி சு. நெல்லையப்பர்
ஆ) நிலவுப்பூ – 2. தி.சு. நடராசன்
இ) கிடை – 3. சிற்பி பாலசுப்பிரமணியம்
ஈ) உய்யும் வழி – 4. கி. ராஜநாராயணன்

அ) 4,3,2,1 ஆ) 1,4,2,3 இ) 2,4,1,3, ஈ) 2,3,4,1

விடை: ஈ) 2,3,4,1

**கூடுதல் வினாக்கள்:**

2. பாரதி, தம் தம்பியாகக் கருதி வந்தவர் ......................

அ) வ.உ. சிதம்பரனார் ஆ) வெங்கடேசன்
இ) பரலி. சு. நெல்லையப்பர் ஈ) பாரதிதாசன்

விடை: இ) பரலி. சு. நெல்லையப்பர்

3. நம்மிலும் மெலியாருக்கு நாம் இரங்கி அவர்களை நமக்கு நிகராகச் செய்துவிட வேண்டுமென்று பாடுபடுதலே நாம் ...................... பெறுவதற்கு வழியாகும்.

அ) வலிமை ஆ) அன்பு இ) அருள் ஈ) செல்வம்

விடை: அ) வலிமை

4. 'உனது கடமையாகக் கொள்' என, பாரதி கூறுவது யாது?

அ) சமுதாயம் காப்பது ஆ) கல்வியை வளர்ப்பது
இ) தமிழை வளர்ப்பது ஈ) உயிரை வளர்ப்பது

விடை: இ) தமிழை வளர்ப்பது

5. தமிழ்நாட்டில் வீதி தோறும் தமிழ் ...................... மலிக என்றெழுது.

அ) பள்ளிக்கூடங்கள் ஆ) கோயில்கள்
இ) பல்கலைக் கழகங்கள் ஈ) தொழிற்சாலைகள்

விடை: அ) பள்ளிக் கூடங்கள்

6. ...................... தாழ்மை செய்தோன் கண்ணைக் குத்திக் கொண்டான் என்றெழுது.

அ) மண்ணைத் ஆ) கண்ணைத் இ) பெண்ணைத் ஈ) விண்ணைத்

விடை: இ) பெண்ணைத்

7. கவிகேசரி சாமி தீட்சிதர் எழுதிய நூல் ......................

அ) பாரதி கடிதங்கள் ஆ) முரசுப்பாட்டு
இ) வம்சமணி தீபிகை ஈ) கண்ணன் பாட்டு

விடை: இ) வம்சமணி தீபிகை

8. கர்மயோகி இதழில் துணையாசிரியராக இருந்தவர் ......................

அ) வைத்தியநாத ஐயர் ஆ) கி. வா. ஜ
இ) சு. நெல்லையப்பர் ஈ) வி. நடராஜ ஐயர்

விடை: இ) சு. நெல்லையப்பர்

9. 'உய்யும் வழி' என்ற கவிதை நூலின் ஆசிரியர் ........................

அ) சிற்பி ஆ) குந்திகேசவர் இ) பாரதியார் ஈ) சு.நெல்லையப்பர்

விடை: ஈ) சு. நெல்லையப்பர்

## II. குறுவினாக்கள் :

2 மதிப்பெண் வினாக்கள்

### கூடுதல் வினாக்கள்:

1. நல்லின்பம் உண்டாகுமென்பது பாரதி கூறுவது யாது ?

'தம்பி, மாதத்துக்கு மாதம், நாளுக்கு நாள், நினதறிவு மலர்ச்சி பெற்று வருவதைக் காண்கிறேன். நினது உள்ளக்கமலத்திலே பேரறிவாகிய உள்–ஞாயிற்றின் கதிர்கள் விரைவிலே தாக்கி நினக்கு நல்லின்பம் உண்டாகுமென்று கருதுகிறேன்', என்று நெல்லையப்பருக்கு; தம் கடிதத்தில் தெரிவித்தார் பாரதி.

2. "குடல் குலுங்கச் சிரி" என்று பாரதி ஏன் கூறுகிறார் ?

நிற்கும் நிலையிலிருந்து கீழே விழாதபடி கயிறுகள் கட்டி வைத்துக் கொண்டு பிழைக்க முயற்சி பண்ணும் பழங்காலத்து மூடர்களைக் கண்டு குடல் குலுங்கச் சிரி என்றார் பாரதி.

3. 'கடமையாகக் கொள்' என பாரதி எதனைக் கூறுகிறார் ?

தமிழ், தமிழ்,தமிழ், – என்று எப்போதும் தமிழை வளர்ப்பதே கடமையாகக் கொள்க! என்கிறார் பாரதி.

4. தமிழ் நாட்டில் மலிந்திடுக என்று பாரதி முழங்குவது யாது ?

முயற்சிகள் ஓங்குக, சங்கீதம், சிற்பம், இயந்திர நூல், பூமி நூல், வான நூல், இயற்கை நூலின் ஆயிரம் கிளைகள் இவை தமிழ் நாட்டிலே மலிந்திடுக என்று முழங்கு! என்கிறார் பாரதி.

## III. நெடுவினா :

6 மதிப்பெண் வினாக்கள்

### பாடநூல் வினா:

1. பாரதியின் கடிதம் வாயிலாக நீங்கள் அறிந்து கொண்ட மொழிப்பற்று, சமூகப்பற்று ஆகியவற்றை விவரிக்க.

**குறிப்புச் சட்டகம்**

முன்னுரை
மொழிப்பற்று
சமூகப்பற்று
முடிவுரை

**முன்னுரை :**

உறவுக்கு, அறிவுறுத்தலுக்கு, வேண்டுதலுக்கு, வணிகத்திற்கு என்று கடிதங்கள் எழுதப்பட்டு வருகின்றன. பாரதி கூட தம் நெருங்கியவர்களுக்குக் கடிதத்தின் வாயிலாக பல கருத்துகளை எடுத்துக் கூறுகிறார். இவ்வாறு நெல்லையப்பருக்கு பாரதி எழுதிய கடிதத்தின் வாயிலாக அவரது மொழிப்பற்று, சமூகப்பற்றுப் போன்றவற்றைக் காணலாம்.

**மொழிப்பற்று :**

பல்வேறு விதமான மொழிகளை அறிவதால், பிற மொழிப் பத்திரிகைகள் கூறும் அற்புதமான புதுமைக் கருத்துகளைத் தெரிந்து கொள்ளலாம். அதனால், தமிழ் நாட்டிற்கும் பல நன்மைகள் உண்டாகும்! தமிழ்! தமிழ்! என்று எப்போதும் தமிழை வளர்ப்பதையே கடமையாகக் கொள்ளவேண்டும். ஆனால், புதிய புதிய செய்தி, புதிய புதிய யோசனை, புதிய புதிய உண்மை, புதிய புதிய இன்பம் தமிழில் ஏற்றிக் கொண்டே போகவேண்டும்.

தமிழ் நாடு வாழ்க! தமிழ் நாட்டில் நோய்கள் தீர்க, வீதிகள் தோறும் தமிழ்ப்பள்ளிகள் மலிக என்றெழுது. அந்தத் தமிழ்ப் பள்ளிக் கூடங்களிலே நவீன கலையெல்லாம் பெற்று வளர்க என்றெழுது என்கிறார் பாரதி. முயற்சிகள் ஓங்குக, சங்கீதம், சிற்பம், எந்திரநூல், பூமி நூல், வானநூல், இயற்கை நூலின் ஆயிரம் கிளைகள் தமிழ் நாட்டிலே பெருகிட வேண்டும் என்று பாரதியின் மொழிப்பற்றை அறிய முடிகிறது.

**சமூகப்பற்று :**

ஆணும், பெண்ணும் ஓருயிரின் இரண்டு தலைகள், அவை ஒன்றிலொன்று தாழ்வில்லை பெண்ணைத் தாழ்மை செய்தோன் கண்ணைக் குத்திக் கொண்டான். பெண்ணை அடைத்தவன் கண்ணை அடைத்தான். தொழில்கள் பெருகவேண்டும், வியாபாரம் வளரவும் இயந்திரங்கள் பெருகவும் வேண்டும் என்ற பாரதியின் சமூகப் பற்றை அறியமுடிகிறது.

**முடிவுரை :**

இவ்வாறு பரலி. சு. நெல்லையப்பருக்கு, பாரதி எழுதிய கடிதத்தின் மூலமாக அவரின் மொழிப்பற்றையும், சமூகப்பற்றையும் அறிய முடிகிறது.

## கற்பவை கற்றபின்

1. பாரதியின் வாழ்வினைக் காலக்கோடாக உருவாக்குக.

| | |
|---|---|
| 1882 | பாரதி பிறப்பு |
| 1887 | தாய் மரணம் |
| 1889 | தந்தை மறுமணம் |
| 1893 | பாரதி பட்டம் |
| 1894 - 1897 | திருநெல்வேலி இந்து கல்லூரியில் ஐந்தாம் படிவம் வரை படிப்பு |
| 1897 | செல்லம்மாவுடன் திருமணம் |
| 1898 | தந்தை மரணம் |
| 1898 - 1902 | காசியில் அத்தை குப்பம்மாளுடன் வசம். காசி இந்துகலா சாலையில் சமஸ்கிருதம், ஹிந்தி பயிலல் |
| 1902 - 1904 | எட்டயபுரம் வசம் விவேக பானுவில் தனிமை இரக்கம் என்ற முதல் பாடல் அச்சேறுகிறது. |
| 1904 | மதுரை சேதுபதி மேல்நிலைப் பள்ளியில் தமிழ்ப்பண்டிதர் |
| 1904 | சுதேச மித்திரன் உதவி ஆசிரியர், சக்கரவர்த்தினி இதழில் ஆசிரியர் பொறுப்பு |
| 1905 | விவேகானந்தரின் சிஷ்யை நிவேதிதா தேவியைச் சந்தித்து ஞான குருவாக ஏற்றல் |
| 1906 | இந்தியா வார பத்திரிகை உதயம் |
| 1907 | திலகர், அரவிந்தர் சந்திப்பு |
| 1907 | சுதேச கீதங்கள் - பாடல்கள் வெளியீடு |
| 1908 | சிறை தண்டனை |
| 1908 | சுதேச கீதங்கள் தொகுதி வெளியீடு |
| 1908 - 1910 | இந்தியா இதழ் நின்று போகிறது |
| 1909 | ஜன்ம பூமி - இரண்டாவது கவிதை தொகுதி வெளியீடு |
| 1910 | விஜயா, தினசரி, சூர்யோதயம், வாரப் பதிப்பு. பாலபாரதி, கர்மயோகி, - பதிப்பு நின்று விட்டது |
| 1910 | அரவிந்தர் - சந்திப்பு |
| 1910 | மாதமணி வாசகம் நூல் வெளியீடு |
| 1912 | கீதை மொழிபெயர்ப்பு, கண்ணன் பாட்டு, குயில் பாட்டு, பாஞ்சாலி சபதம் இயற்றிடல் |

| | |
|---|---|
| 1913 – 1914 | ஞானப்பாவை பத்திரிக்கை வெளியீடு |
| 1917 | கண்ணன் பாட்டு முதல் பதிப்பு சு.நெல்லையப்பர் சென்னையில் வெளியீடு. |
| 1918 | சுதேச கீதங்கள் பாடல் வெளியீடு |
| 1918 | கைது |
| 1918 20 | கடையம் வசம் |
| 1919 | ராஜாஜி வீட்டில் காந்திஜியுடன் சந்தித்தல் |
| 1920 | சுதேசமித்திரனின் மீண்டும் உதவியாசிரியர் பணி |
| 1921 ஜுலை | யானை ஒதுக்கித்தள்ள அதிர்ச்சியில் நோயுறுதல் |
| 1921 செப் | வயிற்றுக் கடுப்பு நோய் |
| 1921 | மருந்து உண்ண மறுப்பு |
| 1921 | மறைவு |

2. காலத்தை வென்ற மகாகவியான பாரதிக்குக் கற்பனைக் கடிதம் ஒன்றை எழுதுக.

அன்புள்ள தமிழ் ஆசான்,

உமது பிறப்பால் தமிழையும் தமிழால் உமது பிறப்பையும் பெருமை கொள்ள செய்த பாரதியே! எட்டுத் திக்கிலும் என் தமிழ் கொஞ்சி விளையாட மேடைதோறும் அதன் அழகு மிஞ்சி எழிலோட ஏடுடெத்துக் காவியம் படைத்த கன்னித்தமிழா! பாரதி! நீ யார்? பத்திரிகையாளராக, பாவலராக, புதுநெறிப் புலவராக, சுதந்தரப் போராளியாக, பன் மொழி அறிஞராக! எழுத்தாளராக எத்தனை எத்தனை அவதாரம் உன்னுடையது! எம்மாநிலப் பெண்களுக்கு உமது பெயரே உடைவாள்! உமது கவிதையே குறிக்கோள்! எங்கே சென்றாய்! யுகம் தாண்டும் கவிதைகளைத் தந்துவிட்டு இவ்வுலகு தாண்டி எங்குச் சென்றாய்! பல வேடிக்கை மனிதர்கள் உம்மை மறந்தே போனார்கள்! பல புதுமைப் பெண்கள் தம் வீரம் மறந்தே போனார்கள்! உமது மீசைக்கே வாழ்விழக்கும் வீணர்கள் இங்கு புற்றீசல்கள் போல மலிந்தே போனார்கள்! மீண்டும் பிறப்பாய்! அடிமைப் புத்தியில் மண்டிட்டுப் பிழைக்கும் பிழைப்பாளர்களுக்கு மறுவாழ்வு தர பாரதியே மீண்டும் பிறப்பாய்!

www.nammakalvi.in



மொழி - உயிரினும் ஓம்பப் படும்

இயல் 1

# தமிழாய் எழுதுவோம்

## இலக்கணம்

### I. பலவுள் தெரிக :

1 மதிப்பெண் வினாக்கள்

**கூடுதல் வினாக்கள்:**

1. சொல்லின் தொடக்கமாக வரும் எழுத்து ........................

அ) நகரம் ஆ) லகரம் இ) ரகரம் ஈ) னகரம்

விடை: அ) நகரம்

2. சொல்லின் இறுதியில் வாராத மெய்யெழுத்து ........................

அ) ழகர மெய் ஆ) நகரமெய் இ) றகரமெய் ஈ) ணகரமெய்

விடை: இ) றகரமெய்

3. வல்லின மெய்களில் ஈரொற்றாய் வராத எழுத்துகள்........................

அ) க், ச் ஆ) த், ப் இ) ச், ட் ஈ) ட், ற்

விடை: ஈ) ட், ற்

4. கருத்து 1 : ஆய்த எழுத்து சொல்லின் இடையில் மட்டுமே வரும்.
கருத்து 2 : தனிச் சொல்லாயின் மூவெழுத்தாகவும், தனிக்குறிலை அடுத்தும் வரும்.

அ) கருத்து 1 சரி ஆ) கருத்து 2 சரி
இ) இரண்டு கருத்துகளும் சரி ஈ) கருத்து 1 சரி, 2 தவறு

விடை: இ) இரண்டுகருத்துகளும் சரி

5. மெல்லின எழுத்துகளில் சொல்லின் தொடக்கமாக வாராத எழுத்துகள்

அ) ண, ன ஆ) ங, ஞ இ) ம, ந ஈ) ங, ண

விடை: அ) ண,ன

6. தனிக்குறிலை அடுத்து வாரா ஒற்றுகள்

அ) தகரம், பகரம் ஆ) ரகரம், ழகரம்
இ) நகரம், னகரம் ஈ) ணகரம், னகரம்

விடை: ஆ) ரகரம், ழகரம்

7. பல் + நூல் என்பது எவ்வாறு புணரும்?

அ) பல்நூல் ஆ) பல நூல் இ) பந்நூல் ஈ) பன்னூல்

விடை: ஈ) பன்னூல்

8. பல் + துளி என்பது எவ்வாறு புணரும்?

அ) பஃறுளி ஆ) பல்துளி இ) பல்றுளி ஈ) பலதுளி

விடை: அ) பஃறுளி

## II. குறுவினாக்கள் :

2 மதிப்பெண் வினாக்கள்

**கூடுதல் வினாக்கள்:**

1. ' எழுதும் போது ஏற்படும் பிழைகளை வகைப்பட்டியல் இடுக. PTA
   1. எழுத்துப்பிழை
   2. சொற்பொருட் பிழை
   3. சொற்றொடர்ப் பிழை
   4. பொதுவான பிழைகள் சில.

2. எழுத்துப் பிழைகள் ஏற்பட காரணங்கள் யாவை?
   * குறில், நெடில் வேறுபாடு அறியாதிருப்பதும்,
   * எழுத்துகள் வரும் முறையில் தெளிவற்றிருப்பதும்,
   * பேசுவதைப் போலவே எழுத எண்ணுவதுமே பிழைகள் ஏற்பட காரணமாக உள்ளன.

3. எழுத்துப்பிழைகளைத் தவிர்க்க வேண்டிய முறையை விளக்குக.
   எழுத்துகளின் ஒலிப்புமுறை, அவற்றுக்கான வரிவடிவ வேறுபாடு, அவை சொல்லில் வரும் இடங்களையும் (முதல், இடை, கடை) தெள்ளத் தெளிவாய் மனத்துள் பதித்துக் கொள்வதைக் கடமையாகக் கொள்ளவேண்டும்.

4. ஈரொற்றாய் வராத வல்லிய மெய்கள் யாவை?
   ட், ற் என்றும் மெய்களை அடுத்து மெய்கள் வருவதில்லை.

5. ஆய்த எழுத்து சொல்லில் எவ்வாறு பயின்று வரும்?
   * ஆய்த எழுத்து சொல்லின் இடையில் மட்டுமே வரும்.
   * தனிச் சொல்லாயின் மூவெழுத்தாகவும், தனிக்குறில், அடுத்தும் வரும்.
   * சான்று : அஃது, எஃகு, கஃசு

6. சொல்லின் முதலில் வராத வல்லின எழுத்துகள் எவை?
   * சொல்லின் முதலில் வராத எழுத்துகள் ட, ற ஆகும்.
   * அவை சொல்லின் முதலில் வந்தால் அவை தமிழ்ச் சொற்களாகா.

7. மெல்லின மெய்கள் சொல்லின் முதலில் வராதவை யவை?
   சொல்லின் முதலில் வராத மெல்லின எழுத்துகள் ண, ன ஆகும்.

8. இடையின எழுத்துகளுக்குப் பின் இடம்பெறுவன யாவை?
   ய்,ர்,ல்,ழ்,ள், என்னும் எழுத்துகளுக்குப்பின் வியங்கோள் / வினைமுற்று / கள் விகுதி / வல்லினத்தில் தொடங்கும் சொற்கள் வரும்போது இயல்பாய் நிற்கும்.
   சான்று : நாய்கள், தாய்சேய், ஊர்க, ஊர்சூழ், வாழ்க, கால்கள், தோள்கள்.

9. மெய்யெழுத்துகளில் ஈரொற்றாய் வரும் எழுத்துகள் யாவை? சான்று தருக.
   ய, ர, ழ ஒற்றுகள் மட்டுமே ஈரொற்றாய் வரும். மற்றவை அளபெடுத்தால் மட்டுமே வரும்.
   சான்று : பாய்ச்சு, பார்க்கும், வாழ்க்கை

10. தொடரில் ஒரு, இரு என்னும் சொற்களின் பின் உயிர்வரின் எவ்வாறு மாறும்?
    உயிர்வரின் ஒரு, இரு என்றும் சொற்கள் ஓர், ஈர் என்றும் மாறும்.

11. தொடரில் அது, இது, எது என்னும் சொற்களின் பின் உயிர்வரின் எவ்வாறு மாறும்?
    உயிர்வரின் அது, இது, எது என்பன முறையே அஃது, இஃது, எஃது என்பனவாக மாறும்.

12. தனிக்குறிலை அடுத்து வராத ஒற்று எழுத்துகள் எவை?
    தனிக்குறிலை அடுத்து வராத ஒற்று எழுத்துகள் ரகர, ழகரங்களாகும்.

13. எழுத்துகள் குறித்த அடிப்படையான செய்திகள் யாவை?

| | | | |
|---|---|---|---|
| (i) | 12 உயிரெழுத்துகள் | – | குறில் – 5<br>நெடில் – 7 |
| (ii) | 18 மெய்எழுத்துகள் | – | வல்லினம் – க் ச் ட் த் ப் ற்<br>மெல்லினம் – ங் ஞ் ண் ந் ம் ன்<br>இடையினம் – ய் ர் ல் வ் ழ் ள் |
| (iii) | 216 உயிர்மெய் எழுத்துகள் | – | உயிர்மெய்க்குறில் – 90<br>உயிர்மெய் நெடில் – 126 |
| (iv) | ஆய்தம் | – | 1 |

## III. நெடுவினா :

6 மதிப்பெண் வினாக்கள்

பாடநூல் வினா:

1. 'சொல்லோவியங்கள்(கவிதை)' என்னும் நூல் உங்கள் பள்ளி ஆசிரியரால் எழுதப்பட்டு உங்கள் பள்ளியில் வெளியிடப்படுகிறது. அவ்வெளியீட்டு விழாவிற்கான நிகழ்ச்சி நிரலை உருவாக்கி, நன்றியுரை ஒன்றை எழுதுக.

**அரசினர் மேல்நிலைப் பள்ளி**

**"சொல்லோவியங்கள்" கவிதை நூல் வெளியீட்டு விழா**

இடம்: பள்ளி வளாகம்

நிகழ்ச்சி நிரல்:

* தமிழ்த்தாய் வாழ்த்து (பள்ளி மாணவிகள்)
* வரவேற்புரை (மாணவத் தலைவன்)
* குத்து விளக்கு ஏற்றல் (பள்ளி ஆசிரியைகள்)
* நூலினை வெளியிட்டு விழா பேருரை (கவிப்பேரரசு வைரமுத்து)
* வாழ்த்துரை (கவிஞர் பா. விஜய்)
* கருத்துரை (கவிஞர் யுகபாரதி)
* நன்றியுரை (முதுகலைத் தமிழாசிரியர்)
* நாட்டுப் பண் (பள்ளி மாணவர்கள்)

எம்பள்ளித் தலைமையாசிரியரின் 'சொல்லோவியங்கள்' என்ற கவிதை நூல் வெளியீட்டு விழாவிற்கு வந்து, அந்நூலை வெளியிட்டு விழாப் பேருரை வழங்கிய கவிப்பேரரசு ஐயா வைரமுத்து அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்விழா இனிதே தொடங்க குத்து விளக்கு ஏற்றி ஒளிபெறச் செய்த எம்பள்ளி ஆசிரியைகள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். வாயார வரவேற்று மனதார மகிழ்ந்து வரவேற்பு நல்கிய பள்ளி மாணவத் தலைவர் அவர்களுக்கு எனது அன்பு கலந்த நன்றிகள்! நூலாசிரியரை வாழ்த்தியும், அவரது கவிதைகளைப் புகழ்ந்தும் வாழ்த்துரை வழங்கிய கவிஞர் பா. விஜய் ஐயா அவர்களுக்கும், கவிஞர் ஐயா யுகபாரதி அவர்களுக்கும் எனது இனிய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ்த்தாய் வாழ்த்தும், நாட்டு வாழ்த்தும் பாடிச் சென்ற எம்பள்ளிப் பாசப்பறவைகளான மாணவ மாணவியர்களுக்கும், ஒலி ஒளி ஏற்பாடு செய்து கொடுத்த நண்பர்களுக்கும், தொலைக்காட்சி மற்றும் செய்தித்துறை நண்பர்களுக்கும், தமிழ் ஆர்வலர்களும் மற்றும் இவ்விழாவினைச் சிறப்பிக்க இங்கு வந்திருக்கும் மாணவக் கண்மணிகளுக்கும் எனது மனமார்ந்த நன்றியினைக் கூறி, வாழ்த்தி வணங்கி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

## IV. பொருள் வேறுபாடு அறிதல்

1. அறம், அரம்

அறம் – தர்மம், நீதி
அரம் – ஒரு கருவி

2. குறை, குரை

குறை – சுருக்குதல், குறைவு
குரை – நாய் குரைத்தல்

3. வளம், வலம்
வளம் – வளமை, அழகு
வலம் – சுற்றுதல், வலப்பக்கம், வெற்றி

4. களம், கலம்
களம் – இடம், போர்க்களம்
கலம் – கப்பல், பாத்திரம்

5. கிளி, கிலி
கிளி – பறவை
கிலி – அச்சம், பயம்

6. என்றாள், என்றால்
என்றாள் – இன்று அஷ்டமி, நாளை நவமி என்றாள்.
என்றால் – அஷ்டமி, நவமி என்றால் என்ன?

7. ஆணை, ஆனை
ஆணை – கட்டளை
ஆனை – யானை

8. போனாள், போனால்
போனாள் – தலைவி தலைவனை நினைத்து மெலிந்து போனாள்.
போனால் – சொல்லப் போனால்

9. மழை, மலை
மழை – மழைநீர், குளிர்ச்சி, மேகம்
மலை – குன்று, பொருப்பு, வெற்பு, சிகரம்

## V. இலக்கணத் தேர்ச்சி கொள்:

1. பிழையான தொடரைக் கண்டறிக. PTA
அ) காளைகளைப் பூட்டி வயலை உழுதனர்.
ஆ) மலைமீது ஏறி கல்வெட்டுகளைக் கண்டறிந்தனர்.
இ) காளையில் பூத்த மல்லிகை மனம் வீசியது.
ஈ) நெற்பயிர்கள் மழை நீரில் மூழ்கின.
விடை : இ) காளையில் பூத்த மல்லிகை மனம் வீசியது

2. பேச்சுத் தமிழில் அமைந்த தொடரை தேர்க. M-20
அ) அவருக்கு நல்லது கெட்டது நல்லாத் தெரியும்.
ஆ) புத்தகக் கண்காட்சி நடைபெறுகிறது.
இ) வறட்சி எல்லா இடங்களையும் பாதித்துள்ளது.
ஈ) மயில்கள் விறலியரைப் போல் ஆடுகின்றன.
விடை :அ) அவருக்கு நல்லது கெட்டது நல்லாத் தெரியும்

3. முடிந்தால் தரலாம் – முடித்தால் தரலாம் – இவ்விரு சொற்றொடர்கள் உணர்த்தும் பொருள் யாவை?
1. முடிந்தால் தரலாம் – ஏழைச் சிறுவர்களுக்கு கல்வி உதவியை அனைவரும் முடிந்தால் தரலாம்.
2. முடித்தால் தரலாம் – நாளை பயிற்சி புத்தகத்தை முடித்தால் தரலாம்.

4. தமிழில் பிழையின்றி எழுதுவதற்கு மேற்கொள்ள வேண்டிய முயற்சிகள் யாவை ?
* எழுத்தினை தெளிவாக உச்சரிக்கப் பழகவேண்டும்.
* ந, ண, ன / ல, ள ழ / ற, ர ஒலிப்பு வேறுபாடு தெரிந்து ஒலிக்க வேண்டும்.
* தமிழில் இவ்வெழுத்துகள் வரும் முறையையும், அவை ஏற்படுத்தும் பொருள் மாற்றத்தையும் அறிந்து கொள்வது இன்றியமையாத ஒன்றாகும்.
* தொடக்கத்தில் சில காலம் வாய் விட்டோ அல்லது மனத்துக்குள் உச்சரித்தபடியோ எழுதப்பழகுவது நல்லது.
* வேகமாக எழுத முயல்வது பிழைக்கு வழி கோலும்.
* கெ, கே, கொ, கோ போன்ற கொம்புடைய குறில், நெடில் வேறுபாட்டினைப் புரிந்து எழுதவேண்டும்.

கூடுதல் வினா:

5. பிழையற்ற தொடரைக் கண்டறிக.

அ) சென்னையிலிருந்து நேற்று வந்தான்

ஆ) கோவலன் மதுரைக்குச் சென்றது

இ) பறவைகள் நெல்மணிகளை வேகமாகக் கொத்தித் தின்றது

ஈ) குதிரையும் யானையும் வேகமாக ஓடியது

விடை: அ) சென்னையிலிருந்து நேற்று வந்தான்

6. பிழையற்ற தொடரைக் கண்டறிக.

அ) மாடுகள் புல் மேய்ந்தது

ஆ) ஔவையார் சிறந்த புலவர்

இ) குமரனும், அமுதனும் சிறுவயது வரை நண்பர்கள்

ஈ) புலி பசித்தாலும் புல்லைத் தின்ன மாட்டார்

விடை: ஆ) ஔவையார் சிறந்த புலவர்

## கற்பவை கற்றபின்

1. மயங்கொலி எழுத்துகள் (ண,ந,ன,ல,ழ,ள,ர,ற) அமைந்த சொற்களைத் திரட்டி, பொருள் வேறுபாடு அறிந்து வகுப்பறையில் கலந்துரையாடுக.

ஆசிரியர் : வணக்கம் மாணவர்களே! மயங்கொலி எழுத்துகளான ண, ன, ல, ழ, ள, ர, ற ஆகியவை அமைந்த சொற்களின் பொருள் வேறுபாடுகளை நாம் வகுப்பறையில் கலந்துரையாடுவோம்.

மாணவர்கள் : வணக்கம் ஐயா, கலந்துரையாடுவோம் ஐயா!

ஆசிரியர் : ணகர, னகர சொற்களை முதலில் நாம் கூறி அதற்கான பொருளை அறிவோமா? சரி செல்வி! ண கர சொற்களுக்கான இரண்டு சான்றினைத் தந்து பொருள் கூறு.

செல்வி : ஐயா, ஊண் என்றால் உணவு
ஊன் என்றால் இறைச்சி, ஐயா.

ஆசிரியர் : நன்றாகச் சொன்னாய் செல்வி, மிக அருமை.
ல, ள, ழ, கரங்களின் மங்கொலிச் சொற்களைக் கூறிப் பொருள் தா மகதி.

மகதி : ஐயா, வலை என்றால் – மீன் பிடிக்க பயன்படும் பொருள்
வழை – என்றால் ஒரு வகை மரம்
வளை – என்றால் பொந்து அதாவது எலிவளை அல்லது வளையல் ஐயா.

ஆசிரியர் : மகதி, சிறப்பாகச் சொன்னாய்! நன்று.
சரி! முகமது, நீ சொல்!
ரகர, றகர சொற்களின் மயங்கொலிகளுக்குச் சான்று தா முகமது.

முகமது : ஐயா, அரம் என்றால் ஒரு கருவி.
அறம் என்றால் தருமம் அல்லது கொடை, ஐயா

ஆசிரியர் : நன்று மாணவர்களே! நீங்கள் மூவருமே சிறப்பாகச் சொன்னீர்கள். உங்களுக்கு எனது பாராட்டுக்கள். இவை போன்று தமிழில் எண்ணற்ற சொற்கள் இருக்கின்றன. அவற்றை அகராதியின் துணைகொண்டு பட்டியலிட்டு, அவற்றைக் கற்றுக் கொள்ளுங்கள் மாணவர்களே! பிழையின்றி எழுதவும், படிக்கவும் நமக்கு உதவுவது பயிற்சி மட்டுமே! அதனால் தான் சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம் என்ற பழமொழி தோன்றியது. அப்படி மொழியைப் பின்பற்றித் தமிழ் சிறக்க வாழ்வோம்!

## மொழியை ஆள்வோம்

**சான்றோர் சித்திரம்:**

1. ஆறுமுக நாவலர் எவ்வாறு புகழப்படுகிறார்?
"வசனநடை கைவந்த வல்லாளர்" என்று புகழப்படுகிறார்.

2. ஆறுமுக நாவலர் எத்தகைய ஆளுமையைப் பெற்றவர்?
தமிழ் நூல் பதிப்பு, உரைநடை ஆக்கம், பாடசாலை நிறுவுதல், அச்சுக்கூடம் நிறுவுதல், கண்டன நூல்கள் படைத்தல், சைவ சமயச் சொற்பொழிவு எனப் பன்முக ஆளுமையைப் பெற்றவர்.

3. ஆறுமுக நாவலர் பதிப்பித்த நூல்கள் யாவை?
* திருக்குறள் பரிமேலழகர் உரை
* சூடாமணி நிகண்டு
* நன்னூல் சங்கர நமச்சிவாயர் விருத்தியுரை

என்று பல நூல்களைப் பதிப்பித்தார்.

4. திருவாவடுதுறை ஆதீனம் ஆறுமுகருக்கு வழங்கிய பட்டம் யாது?
"நாவலர்"

5. 'படைத்தல்' – இச்சொல்லுக்குரிய இலக்கணக் குறிப்பு தருக.
தொழிற்பெயர்

**தமிழாக்கம் தருக:**

1. Learning is a treasure that will follow its owner everywhere. PTA
கல்வி என்பது அதன் உரிமையாளரை அவர் செல்லும் இடங்களுக்கெல்லாம் அவரைப் பின் தொடர்ந்து வரும் ஒரு செல்வம்.

2. A new language is a new life. PTA
புதிய மொழி; புதிய வாழ்க்கை.

3. If you want people to understand you, speak their language.
உன்னை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்று விரும்பினால், நீ அவர்களுடைய மொழியில் பேச வேண்டும்.

4. Knowledge of languages is the doorway to wisdom. PTA
மொழிகளைப் பற்றிய அறிவு நம் ஞானத்திற்கு கதவு.

5. The limits of my language are the limits of my world. PTA
எனது மொழியின் எல்லையே என் உலகின் எல்லை.

**கீழ்க்காணும் பத்தியைப் படித்து ஐந்து வினாக்களை உருவாக்குக :**

**மொழி வரலாறு (மு.வ.)** **பாடப் புத்தகம் பக்கம் – 20**

1. மக்களின் அரியதொரு கலையாகவும், கருவியாகவும் விளங்குவது எது?
2. தாயின் முதல் வேட்கை யாது?
3. குழந்தையின் மன வளர்ச்சியோடு தொடர்புடையது எது?
4. மனம் என்பது யாது?
5. மக்களோடு தொடர்புடையது மொழி என்று மு.வ. கூறுவன யாவை?

## இலக்கிய நயம் பாராட்டுக

PTA

முச்சங்கங் கூட்டி
முதுபுலவர் தமைக் கூட்டி
அச்சங்கத் துள்ளே
அளப்பரிய பொருள்கூட்டி
சொற்சங்க மாகச்
சுவைமிகுந்த கவிகூட்டி
அற்புதங்க ளெல்லாம்
அமைத்த பெருமாட்டி !

– கண்ணதாசன்

### ஆசிரியர் குறிப்பு :

| | | |
|---|---|---|
| பெயர் | – | கண்ணதாசன் |
| இயற்பெயர் | – | முத்தையா |
| பெற்றோர் | – | சாத்தப்ப செட்டியார் – விசாலாட்சி |
| ஊர் | – | சிறுகூடல்பட்டி (சிவகங்கை மாவட்டம்) |
| நூல்கள் | – | ◦ ஆட்டனத்தி ஆதிமந்தி, ◦ மாங்கனி, ◦ குழந்தைக்காக, ◦ இயேசு காவியம், ◦ சேரமான் காதலி, ◦ கண்ணதாசன் கவிதைகள். |
| காலம் | – | 1927 – 1981. |

### திரண்டகருத்து :

முதல், இடை, கடை என முன்று தமிழ்ச் சங்கங்களைக் கூட்டிச் சிறந்த புலவர்களை எல்லாம் வரவழைத்து, அச்சங்கத்திலே அளவிடமுடியாத பொருட்சுவைகளைக் கூட்டி, சொற் சங்கமாக, மிகுதியான பாடல்களைப் பாட்டுவித்து, பல்வேறு அற்புதங்களை எல்லாம் உருவாக்கியவள் தமிழன்னை.

### மையக் கருத்து :

பாடலின் கருவைக் குறிப்பது மையக்கருத்து. இப்பாடலில் தமிழன்னையின் சிறப்புப்பற்றிக் கூறப்பட்டுள்ளது.

### மோனை நயம் :

செய்யுளில் சீர்தோறும் அல்லது அடிதோறும் முதல் எழுத்து ஒன்றி வருவது மோனை எனப்படும்.

சான்று :
சீர்மோனை – முச்சங்கம்
முதுபுலவர்

### எதுகை நயம் :

செய்யுளில் சீர்தோறும் அல்லது அடிதோறும் இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது எதுகை எனப்படும்.

சான்று :
அடி எதுகை – முச்சங்கம்
அச்சங்கம்

### இயைபு நயம் :

செய்யுளில் சீர்தோறும் அல்லது அடிதோறும் இறுதியில் அமையக் கூடிய எழுத்தோ, அசையோ, சொல்லோ ஒன்றுபோல் அமைந்தால் அது இயைபு நயம் ஆகும்,

சான்று :
கூட்டி
கூட்டி

### அணி நயம் :
செய்யுளில் கூட்டி என்னும் சொல் மீண்டும் மீண்டும் வந்து ஒரே பொருளைத் தருவதால் இது சொற்பொருள் பின்வரு நிலையணியாகும்.

### சுவை நயம்
இப்பாடலில் தமிழ்மொழியைப் பெருமைபடக் கூறி இருப்பதால் பெருமிதச் சுவையாகும்.

## உவமைத் தொடர்களைச் சொற்றொடர்களில் அமைத்து எழுதுக:

1. தாமரை இலை நீர் போல : இவ்வுலக ஆசைகளின் மீது தாமரை இலை நீர் போலப் பற்றற்று இருத்தல் வேண்டும்.
2. கிணற்றுத் தவளை போல : அலைபேசியே வாழ்க்கை என்று சிலர் கிணற்றுத் தவளை போல அறியாமையில் வாழ்கிறார்கள்.
3. எலியும் பூனையும் போல : சாதி மதத்தின் பெயரால் மக்களுள் சிலர் எலியும் பூனையும் போல பகைமை உணர்வு கொண்டு வாழ்கிறார்கள்.
4. அச்சாணி இல்லாத தேர் போல : ஆசிரியரின் வழிகாட்டுதலில் செல்லாத மாணவர்கள் அச்சாணி இல்லாத தேர் போல துன்புறுவர்.
5. உள்ளங்கை நெல்லிக்கனி போல : ஒழுக்கமுடையார் உயர்ந்த புகழைப் பெறுவர் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி போன்று வெளிப்படையானது.

## கட்டுரை எழுதுக:

### தாய்மொழி வழிக் கல்வியின் சிறப்புகள்

#### முன்னுரை
தாய்மொழி வழிக் கல்வியால் சிந்திக்கும் சிந்தனை ஆற்றல் பெருகிறது. பள்ளிக்கும் சமுதாயத்திற்கும் நெருங்கிய தொடர்பு ஏற்படுகிறது. தாய்மொழி வழிக் கல்வியால் நாம் தன்மானத்தோடு தலை நிமிர்ந்து வாழ முடியும்.

#### தாய்மொழிக் கல்வியின் தேவை
நம்நாடு ஆங்கிலேயரின் ஆட்சிக்கு அடிமைப்பட்டிருந்த காலத்தில், ஆங்கிலம் படித்தால் மட்டுமே வேலை வாய்ப்பு என்ற நிலையிருந்தது. அதனால், நம்மில் மிகப் பலரும் ஆங்கிலத்தையே படித்து வந்தனர். ஆங்கில மொழிவழிக் கல்வி நாட்டில் பரவியது, தாய்மொழிக் கல்வி குறைந்து நம் அறிவின் வளர்ச்சியும் தடைப்பட்டது. தாய்மொழி வழியாகக் கல்வி கற்றால்தான் நாமும் அறிவுத் துறையில் முன்னேற முடியும் என்பதை இப்போது நாம் உணர்ந்து வருகிறோம். ஆகவே, தாய்மொழி வழிக் கல்வியின் தேவை மிகவும் அவசியம் ஆகும்.

#### அறிஞர்களின் பார்வை :
கல்வி கற்பதற்குத் தாய்மொழியே பயிற்சி மொழியாக இருக்கவேண்டும் என்று உலக அறிஞர்கள் எல்லோரும் கூறுகின்றனர். ஏனெனில், இதுவே இயற்கையான முறையாகும். தாய்மொழிக் கல்வியால் தான் அறிவு வளர்ச்சி பெற முடியும். 'குழந்தையின் உடல் வளர்ச்சிக்குத் தாய்ப்பால் எப்படியோ; அப்படி மனிதனின் மன வளர்ச்சிக்குத் தாய்மொழி இயற்கையானது; என்று நம்நாட்டுத் தந்தை காந்தியடிகளும் கூறியுள்ளார். எனவே, நாம் நமது கல்வியைத் தாய்மொழி வழியாகப் பெறுவதே சிறப்பானதாகும்.

#### கற்கும் திறன் :
ஆங்கிலத்தில் படிப்பதே உண்மையான படிப்பு என்ற போலி எண்ணம் நம் மக்கள் மனத்தில் ஊறியிருக்கிறது. முதலில் இந்நிலை மாற்றப்பட வேண்டும். தாய்மொழியில் படிப்போருக்குத் தாய்மொழியைப் பாட மொழியாகக் கற்றுத் தரவேண்டும். தாய்மொழியில் அறிவியல் போன்ற பிற துறை நூல்களை உருவாக்கி அவற்றைப் போதிக்க வேண்டும். தாய்மொழியில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு சலுகைகள் தரப்படவேண்டும்.

**பயன்கள் :**

தாய்மொழி வழியாகக் கல்வி கற்பதால் பாடங்கள் மாணவர்களுக்குச் சுமையாக இருப்பதில்லை. பாடங்களை மிக எளிதாகவும், விரைவாகவும் கற்றுக்கொள்ள முடிகிறது. கற்கும் பாடங்கள் மனத்தில் நன்கு பதிந்து, முழுமையான அறிவைத் தருகின்றன. இன்னொரு மொழியைக் கற்பதற்கு ஏற்படும் காலச் செலவு மிச்சமாகிறது.

**இன்றைய நிலை :**

இன்று கல்லூரிகளில் சில துறைகளை மட்டுமே தாய்மொழியில் பயிற்றுவிக்கிறார்கள். மருத்துவம், பொறியியல், சட்டவியல், வணிகவியல் போன்ற எல்லாத் துறைகளையும் தாய்மொழியிலேயே கற்பிக்கவேண்டும். நாம் எந்த மொழியில் சிந்திக்கின்றோமோ அந்த மொழியில் கல்வி கற்பது தான் சிறந்தது. அந்த முறை தான் அறிஞர்கள் நாட்டிற்கு நல்கும் நன்முறையாகும்.

**முடிவுரை**

ஆரம்பக் கல்வியிலிருந்து உயர்தரக் கல்வி வரை தாய்மொழியிலேயே கற்றுத் தந்தால் நாமும் உலக அரங்கில் உயர்ந்து நிற்க முடியும். தாய்மொழி வழிக் கல்வியே தரமான தன்மானம் மிக்க உயர்ந்த கல்வியாகும்.

## மொழியோடு விளையாடு

1. எண்ணங்களை எழுத்தாக்குக :

அணுத்திரள்களின்
வெளிப்பாடே – சொல்!
ஒலியின் வளர்ச்சியே
மொழி...
மொழி சைகையாக
வரைபடமாக!
எழுத்தாக!
சொல்லாக, வளர்ந்து
மொழியாக நின்றது
மொழி மனித நாகரீகத்தின்
உச்சம்!



2. அந்தாதித் தொடரால் கவித்துவமாக்குக.

குழந்தையைக் கொஞ்சும் தாயின் குரல்
தாயின் குரலில் உயிரின் ஒலி
உயிரின் ஒலியால் நிறைந்தது உலகம்
உலகம் வாழ உறவுகள் வேண்டும்.

3. மறைந்திருக்கும் தமிழறிஞர்களைக் கண்டுபிடிப்போம்.

எ.கா : கவிஞர் : ஈற்றிரு சொல்லால் அணிகலன் செய்யலாம் – கவிமணி

1. தமிழறிஞர் – முதலிரு எழுத்துகளாய் மறைக்கலாம். – மறைமலை அடிகள்
2. தாய்மொழி – ஈற்றிரு எழுத்துகள் வெளிச்சம் தரும். – தமிழ்ஒளி
3. சிறுகதை ஆசிரியர் – முதல் பாதி நவீனம். – புதுமைப்பித்தன்
4. முன்னெழுத்து அரசன்; பின்னெழுத்து தமிழ் மாதம். – கோதை

## செய்து கற்போம்

தமிழறிஞர்கள் எழுதிய கடிதங்களுள் ஏதேனும் மூன்றினைத் திரட்டி வகுப்பறையில் வழங்குக.

1. பாரதியாரின் கடிதங்கள்.

தமிழறிஞர் மு. இராகவையங்காருக்குப் பாராட்டுக் கடிதம்.

இந்தியா ஆபீஸ்,
பிராட்வே, மதராஸ்,
18 அக்டோபர் 1907.

www.nammakalvi.in

அநேக நமஸ்காரம்.

ஒவ்வொரு காலத்துச் சோம்பல் மிகுதியாலும், ஒவ்வொரு காலத்தே முயற்சி மிகுதியாலும் தங்களைப் போன்ற பெரியோர்களுக்கு அடிக்கடி கடிதங்களெழுதிப் புனிதத் தன்மை பெறுவற்கு அவகாசமில்லாதவனாக இருக்கின்றேன்.

சென்றமுறை வெளிவந்த செந்தமிழ்ப் பத்திரிகையிலே தாங்கள் எழுதியிருக்கும் 'வீரத்தாய்மார்கள்' என்ற அற்புத உரையைக் கண்டு மகிழ்ச்சி பூத்து அம்மகிழ்ச்சியைத் தமக்கு அறிவிக்கும் பொருட்டாக இக்கடிதம் எழுதுகிறேன்.

தங்கள் பாண்டியத்தியத்தை நான் புகழ வரவில்லை. அதனை உலகமறியும். தங்களுடைய பரிசுத்த நெஞ்சிலே எழுந்திருக்கும் 'ஸ்வதேச பக்தி' என்ற புது நெருப்பிற்குத்தான் நன் வணக்கம் செய்கிறேன்.

"காலச் சக்கரம் சுழல்கிறது" என்று அவ்வுபந்நியாசத்தின் இறுதியிலே குறிப்பிட்டிருக்கிறீர்கள். ஆம்! காலச் சக்கரம் சுழலவே செய்கின்றது; அந்தச் சுழற்சியிலே, சிறுமைச் சேற்றில் ஆழ்ந்து கிடந்த 'நீச பாரதம்' போய் 'மஹா பாரதம்' பிறக்கும் தறுவாய் வந்துவிட்டது.

'தாழ்நிலை' என்ற இருளிலே மூழ்கிக் கிடக்கும் பாரதவாஸிகளுக்கு மஹா பாரதம் காட்டத் தோன்றியிருக்கும் சோதிகளிலே தமது நெஞ்சிற் பிறந்திருக்கும் நெருப்பொன்றாகும். அதற்கும் வணக்கம் செய்கிறேன். அது வளர்க! ஓம்!

ஸி. சுப்பிரமணிய பாரதி.

## 2. அண்ணாவின் கடிதம்

தம்பி!

சென்ற ஆண்டு பொங்கற் புதுநாளன்று உன்பக்கம் நின்றிடவும் பரிவினைப் பெற்று மகிழ்ந்திடவும் இல்லந்தனிலே.

புனலிடை மூழ்கிப் பொழிலிடை உலவிப்
பொன்னின் இழையும் துகிலும் பூண்டு
கனிமொழி பேசி

நீ களித்திருக்கும் காட்சியினைக் கண்டு மகிழ்வு பெறும் நிலையிலே இருந்தேன். அங்ஙனம் இருந்துவந்த என்னை, அதிலே பெறும் இன்பம் வேறு எதிலும் இல்லை என்ற எண்ணம் கொண்ட என்னைப் பிடித்திழுத்துக் கொண்டுபோய் ஒரு பீடத்தில் அமர்த்திவிட்டாய்.

பெருவெற்றி அல்லவோ அண்ணா என முழக்கமிட்டாய்.

நற்காலம் பொற்காலம் என்றெல்லாம் மகிழ்கின்றாய்.

நானும் என்னாலான அளவுக்கு உன் நம்பிக்கைக்கு ஏற்றவனாக நடந்துகொள்வதில் முற்பட்டிருக்கிறேன்.

எனினும், ஒவ்வோர் ஆண்டும் இந்தப் பொங்கற் புதுநாளன்று என் புன்னகை தவழ்ந்திடும் முகத்தினைக் கண்டு அந்தப் பொலிவினைப் போற்றித் தங்குதடையற்ற நிலையில் இருந்துவந்த நான், கட்டுண்டு கிடக்கிறேன்.

ஒன்று நாம் உணர்கின்றோம் தம்பி! எத்தனை இன்னலுக்கிடையிலே தள்ளப்பட்டிருப்பினும், இந்தப் பொங்கற் புதுநாளில் மட்டும் நமக்கு ஒரு மகிழ்வு, நாட்டுக்கு ஒரு பொலிவு வந்து சேர்ந்துவிடத்தான் செய்கிறது.

நலிந்தோரும்கூட, இந்நாளில் புதுத்தெம்பு வரக் காண்கின்றனர். இந்நாளில் மட்டுமே உழைப்பின் பெருமையை உணர்ந்து உரையாடி மகிழ்ந்திட வாய்ப்புக் கிடைக்கின்றது. இந்நாளே அந்நாளில் தமிழர் வாழ்ந்த நேர்த்தி பற்றிய நினைவு எழுகிறது. நமக்கெல்லாம் எழுச்சி தரத்தக்க முறையிலும் அளவிலும் நம்மைச் சுற்றிக் காணும் பொருள் யாவும் நிலமடந்தை தந்தனள் பரிவுடன், ஆயின், பாலூட்டும் தாயும் சேயுடன் விளையாட்டுக் காட்டி, முடியாது – பிறகு – விடு – அடிப்பேன் என்று கொஞ்சுவதில்லையா; அதுபோல, நிலமடந்தையும் தன் மக்களுக்கு வளம் அளிக்கும் முன்பு, விளையாட்டுக் காட்டுவான் வேண்டி, "உழைத்துப் பெறு! உரிய நேரத்தில் பெறு! முயற்சி செய்து பெறு!" என்று அன்பு ஆணையிடுகிறாள்.

நம் காலத்து நற்புலவர்கள் இந்தப் பொங்கற் புதுநாளின் மாண்பினை நலம் உணர்ந்து உவகை கொண்டாடச் செய்துள்ளனர்.


"தமிழர் திருநாள் தை முதல் நாளாம்
அமிழ்தென இனிக்கும் பொங்கல் திருநாள்
உழைப்பின் உயர்வை உணர்த்தும் பெருநாள்
சளைப்பிலா முயற்சிதரு பயன்பெற்றுப்
புதுமை இன்பம் பூணும் நன்னாள்"

என்று முடியரசன் முழங்குகிறார். நாடு, ஆம் ஆம்! என்கிறது.

இத்தகு திருநாளன்று என்னால் இயன்ற அளவு கருத்து விருந்து அளித்துள்ளேன், காஞ்சி இதழ்மூலம். மற்றவற்றுடன் இதனையும் பெற்று மகிழ்ந்திருப்பாய்.

பொங்குக இன்பம்! பொங்குக புதுமை! பொங்குக பொலிவு! வளம் பெருகிடுக! வாழ்வு சிறந்திடுக! வாழ்க தமிழ்! வாழ்க தமிழகம்!

அண்ணன்,



### 3. மு. வரதராசனாரின் கடிதம்

அன்புள்ள எழில்,

உன் மறுமொழி பெற்றேன். மீண்டும் கேள்விகளைத் தொடுத்திருக்கிறாய். தமிழரும் ஆந்திரரும் மட்டும் இவ்வாறு மொழிப்பற்றுக் கொண்டு போராடுவது ஏன் என்று கேட்டிருக்கிறாய்.

தம்பி! மறதி என்ற ஒன்று பெரிய அளவில் மக்களினத்திற்கு அமைந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும். இன்று பல சிக்கல்கள் எழுந்திராமல் போயிருக்கும். இயல்பாக உள்ள நினைவாற்றல் போதாது என்று, எழுதி வைக்கும் நூல்கள், பாடிப் பரப்பும் பாட்டுக்கள் முதலியவை வாயிலாக மறந்துபோகின்றவற்றையும் மறக்காமல் காப்பாற்றி வருகிறோம். அதனால்தான் இந்தத் தொல்லை உள்ளது. ஆந்திரர் நெடுங்காலமாகத் தம் நாட்டில் ஆட்சி நடத்தியவர்கள். இந்தப் பழம் பெருமையை இவர்களால் மறக்க முடியவில்லை. வரலாறும் பல்வேறு கலைகளும் பழம் பெருமையை நினைவூட்டி வருகின்றன. அதனால்தான் உரிமையான மாகாண வாழ்வை இவர்கள் கேட்கிறார்கள்; நாடுகிறார்கள். பழம் பெருமைகளை மறக்க முடியுமானால், தொல்லை இல்லாமல் போகும்.

அப்படியானால் மற்ற நாட்டு மக்களுக்கு இந்தப் பழம் பெருமை உணர்ச்சி இல்லையா என்று நீ கேட்கலாம். அவர்களின் முன்னோரும் அந்தந்த நாடுகளை ஆண்டிருக்கலாம். ஆனால் அந்த ஆட்சி அவர்களின் மொழியில் நடைபெறவில்லை. கேரள நாட்டில் முந்நூறு ஆண்டுகளுக்கு முன் ஆட்சி இருந்தது; ஆனால் மலையாள மொழியில் அல்ல. ஆந்திர நாட்டு ஆட்சி தெலுங்கு மொழியிலேயே ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாக நடைபெற்றுவந்தது. இடையில் ராபர்ட் கிளைவ் இந்த நாள் முதல் மவுண்ட்பேட்டன் போன நாள் வரையில்தான் ஆங்கிலம் என்று வேறுமொழி ஆட்சி மொழியாகச் செல்வாக்கோடு இருந்தது; இன்று வரையில் ஆட்சிமொழியாக இருந்து வருகிறது. தமிழும் இவ்வாறு நெடுங்காலமாக – மூவாயிரம் நாலாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக ஆட்சி மொழியாகத் தமிழகத்தில் இருந்து வந்திருக்கிறது. சேர, சோழ, பாண்டியர் தோற்றம் முதல் பல்லவர், நாயக்கர், நவாபுகள் காலம் வரையில் தொடர்ந்து ஆயிரக்கணக்கான ஆண்டுகள் ஒரு நாட்டில் ஆட்சிமொழியாக இருந்து வந்தது தமிழ். இந்தப் பெருமை உலகில் வேறு எந்த மொழிக்கும் இல்லை என்றால், சில நூற்றாண்டுகளுக்குமுன் தோன்றிய வடநாட்டு மொழிகளைப் பற்றிக் கேட்பான் ஏன்? இத்தகைய பழம்பெருமை நினைவில் இல்லாமல் மறக்கச் செய்துவிட்டால், தென்னாட்டில் மொழிப் போராட்டம் இல்லாமல் அமைதி உண்டாக்கலாம். ஆனால், முடியுமா?

இத்தகைய பழம்பெருமை இல்லாத காரணத்தால், மராத்தியர், குஜராத்தியர் முதலியவர்களுக்கு மொழியுரிமை வேண்டாம் என்று சொல்லவில்லை. கேரளம், கன்னடம் முதலிய பிரிவுகளும் வேண்டாம் என்று சொல்லவில்லை அவர்கள் ஏன் நம்மைப் போலவும் ஆந்திரரைப் போலவும் கிளர்ச்சி செய்யவில்லை என்று நீ கேட்டதற்குக் காரணம் சொன்னேன்.

பழம்பெருமை மொழியுரிமை உணர்ச்சியை மேன்மேலும் ஊட்டுவதால் இங்கெல்லாம் இந்த நாட்டமும் முயற்சியும் உள்ளன. அங்கெல்லாம் அவ்வாறு இல்லை.

உணர்ச்சி மிகுதிக்குக் காரணம் சொன்னேனே தவிர, பழம்பெருமை இல்லாதவர்களுக்கு உரிமை வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆங்கிலம் முந்தாநேற்றுத் தோன்றிய மொழி; ஆயின் உலக மொழி. இந்தி நேற்றுத் தோன்றிய மொழி; ஆயின் இந்தியாவின் பெரும்பான்மை மொழி. உரிமை வேண்டாம் என்று கூற முடியுமா? எந்த மொழியாயினும், அவரவர்க்கு அதுவே அருமைத் தாய்மொழி; மாகாணப் பிரிவினைக்கு ஏற்ற அளவிற்கு மக்கள் தொகை இருந்தால், அது ஆட்சிமொழியாவதற்க்கு முற்றிலும் தகுதியுடையதாகும். அதைத் தடுப்பது எந்த அரசாயினும் அதை வல்லரசு என்று கூறலாமே தவிர, நல்லரசு என்று கூற முடியாது. ஏன் என்றால், மொழியின் காரணமாக மக்கள் சேர்ந்து உறவுகொண்டு வாழ்வது இயற்கையானது; உரிமையானது; போற்றத்தக்கது. இந்த இயற்கையான உரிமை வாழ்வைத் தடுப்பது தடை மட்டும் அல்ல; அடக்குமுறையுமாகும்.

அந்த நன்னிலையை அடைவதற்கு வழிகள் என்ன என்றும், அடைய முடியுமா என்றும் கேட்டிருக்கிறாய். பிறகுதான் விரிவாக எழுத முடியும். இப்போது நேரம் இல்லை. அடைய முடியும் என்பதை மட்டும் இங்கே சுருங்கக் குறிக்கின்றேன்.

அன்புள்ள,
வளவன்.

## நிற்க அதற்குத் தக

1. கீழ்க்காணும் செயல்பாடுகளைச் சரி / தவறு எனப்பிரித்துச் சரியெனில் காரணமும், தவறு எனில் மாற்றுவதற்குரிய செயலையும் குறிப்பிடுக.

| செயல்பாடு | சரி– காரணம் | தவறு– மாற்றம் |
|---|---|---|
| எ.கா – பொருள்களை எடுத்த இடத்தில் வைத்தல் | சரி. பொருள்களைத் தேடாது எடுக்க முடியும், நேரம் வீணாதல் தவிர்க்கப்படும். | |
| பொதுவிடத்தில் எச்சில் துப்புதல் | | தவறு. பொதுவிடங்களில் எச்சில் துப்புதல் தவிர்த்தல் வேண்டும் |
| வகுப்பில் காகிதங்களைக் கிழித்துப் போடுதல் | | தவறு. கிழித்த காகிதங்களை அதற்குரிய குப்பைக் கூடைகளில் போடுதல் வேண்டும். |
| இருக்கை, மேசைகளில் கிறுக்குதல் | | தவறு. இருக்கை, மேசைகளில் கிறுக்குதல் கூடாது. காகிதங்களைப் பயன்படுத்தல் வேண்டும். |

2. படிப்போம் பயன்படுத்துவோம் (நூலகம்)

Subscription - உறுப்பினர் கட்டணம்
Fiction - புனைவு
Biography - வாழ்க்கை வரலாறு
Archive - ஆவணம்
Manuscript - கையெழுத்துப் பிரதி
Bibliography - நூல் நிரல்.

www.nammakalvi.in